Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ் Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, SEPTEMBER 28, 2022

புதன்கிழமை செப்டெம்பர் 28, 2022 | ஒளி: 08 கதிர்: 109 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ FREE

“சிங்களவர் எவரையும் குடியேற்ற மாட்டேன்”

■ ஷேன் செனவிரத்ன

முல்லைத்தீவு, குருந்தூர் மலைப் பகுதியில் இடம்பெற்றுவரும் தொடர் நிகழ்வுகள் தவறான புரிதலால் இடம்பெற்றதாக நம்புவதாகத் தெரிவித்துள்ள புத்தசாசன, சமய, கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமாநாயக்க, ஒரு நாட்டில் உள்ள தொன்மைகள் அந்த நாட்டிற்கு மாத்திரம் சொந்தமானவை அல்ல; உலகம் முழுவதும் சொந்தமானவை என்றும் தெரிவித்தார்.

கண்டி, ஹிந்தகல ரஜமஹா விஹாரையில் உள்ள புராதன ஓவியங்களை பாதுகாக்கும் பணிகளை பார்வையிடுவதற்காக நேற்று (27) வந்திருந்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து தெரிவித்த அவர்,

தொல்பொருள் திணைக்களத்துக்குச் சொந்தமான காணி மாத்திரமே தொல்பொருள் பிரதேசமாகப் பெயரிடப்படுமே தவிர அங்கு சிங்களவர்களை குடியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாது எனவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

இலங்கைக்கு ஐ.நாவின் உதவிகள் அவசியம்

ஐ.நா பொதுச் செயலாளர் குட்ரஸ்ஸிடம் அமைச்சர் சப்ரி வலியுறுத்து

இலங்கை எதிர்கொண்டுவரும் மோசமான பொருளாதார நெருக்கடியில் இருந்து விடுபடும் நகர்வில் சர்வதேச நாடுகளின் முழுமையான ஒத்துழைப்புகளை தாம் எதிர்பார்ப்பதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, ஐக்கிய நாடுகள் சபை பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்ரஸ்ஸிடம் வலியுறுத்தியுள்ளார். ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையின் 77 ஆவது அமர்வில் கலந்துகொள்ள நியூயோர்க் சென்றுள்ள வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, ஐக்கிய நாடுகள் சபை பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்ரஸ்ஸை

தொடர்ச்சி P2

அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பான

வர்த்தமானியை வலிதற்றதாக்கவும்

ஜனாதிபதிக்கு சட்டமா அதிபர் ஆலோசனை

கொழும்பில் உள்ள பல விசேட பகுதிகளை அதியுயர் பாதுகாப்பு வலயங்களாக பெயரிட்டு வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலை வலிதற்றதாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயுமாறு சட்டமா அதிபர் ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்சய ராஜரட்ணத்தால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொது பாதுகாப்பு அமைச்சின் உயர்மட்ட அதிகாரிகள் குழுவால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளுக்கு அமைய, பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதியால் இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டது.

எனினும், கொழும்பின் மத்திய பொருளாதார வலயத்தின் வர்த்தக நடவடிக்கைகள் குறித்த வர்த்தமானி அறிவிப்பால், பாரியளவில் பாதிப்புகள் ஏற்படும் என பொருளாதார நிபுணர்கள் ஜனாதிபதிக்கு சுட்டிக்காட்டியுள்ளனர்.

கொழும்பில் அவ்வப்போது நடைபெறும் போராட்டங்களால் ஏற்படும் பொருளாதார சேதங்கள் அதிகமாக உள்ளபோதும், அதியுயர் பாதுகாப்பு வலயங்களாகப் பிரகடனப்படுத்துவதன் மூலம் வேறு பிரச்சினைகள் ஏற்படக்கூடும் எனவும் நிபுணர்கள் சுட்டிக்காட்டி உள்ளனர்.

தொடர்ச்சி P2

போராட்டங்களுக்கு அனுமதியைப் பெற வேண்டுமா?

அப்பா, தாத்தாவிடம் கேட்டுப்பாருங்கள்

■ பா.நிரோஸ்

போராட்டங்களை மேற்கொள்ள பொலிஸாரின் அனுமதியைப் பெற வேண்டுமா? இல்லையா என்பதை பதில் பாதுகாப்பு அமைச்சர் பிரமித தென்னகோன் அவரது அப்பா அல்லது தாத்தாவிடம் கேட்டு தெரிந்து கொள்ள வேண்டும் எனக் கடுமையாக சாடிய சுயாதீன பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா, எழுதிக் கொடுப்பதை அப்படியே வாசித்தால் இறுதியில் பைத்தியமாகிவிடுவீர்கள் எனவும் பிரமித தென்னகோனை விமர்சித்தார்.

தொடர்ச்சி P2

பாதுகாப்பு வலயங்கள் என்கிற பெயரில்

கொழும்பில் இராணுவ அரண்கள்

■ பா.நிரோஸ்

நாட்டில் யுத்தமொன்று இல்லாத நிலையில், உயர் பாதுகாப்பு வலயம் என்கிற பெயரில் அரசாங்கம் கொழும்பில் இராணுவ அரண்களை அமைத்துள்ளதாக தெரிவித்த ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பேராசிரியர் ஜீ.எல் பீரிஸ், இரண்டாம் உலக யுத்தம் நடைபெறும்போது, பிரித்தானியா கூட இதுபோன்ற சட்டங்களை அமல்படுத்தவில்லை எனவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

ஜூலை 8ஆம் திகதி சுட்டுக் கொல்லப்பட்ட ஜப்பானின் முன்னாள் பிரதமர் ஷின்சோ அபேயின் இறுதிச் சடங்கு டோக்கியோவிலுள்ள நிப்பொன் புடோக்கனில் (Nippon Budokan) அரச மரியாதையுடன் நேற்று (27) நடத்தப்பட்டது. இதில், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, கலந்து இறுதி அஞ்சலி செலுத்தினார். ஜனாதிபதியுடன் அவரது பணிக்குழாம் பிரதானி சாகல ரத்நாயக்கவும் கலந்து கொண்டார். இந்நிகழ்வில் அமெரிக்காவின் உப ஜனாதிபதி கமலா ஹரிஸ், இந்திய பிரதமர் மோடி, சிங்கப்பூர் பிரதமர் லீ சீன் லூங், ஆஸ்திரேலிய பிரதமர் ஆண்டனி அல்பனீசி, தென் கொரிய பிரதமர் ஹன் டக் சூ, உள்ளிட்ட பல வெளிநாட்டு அரச தலைவர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

முன்னொருபோதும் இல்லாத வகையில்

இலங்கைக்கு மிகமுக்கிய உதவிகளை செய்கிறோம்

பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டிருக்கும் நாடுகளின் கடன்கள் அதிகரித்துச் செல்கின்றமை கவலைக்குரிய விடயமென இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார். முன்னொருபோதும் இல்லாத வகையில் 2022 ஆம் ஆண்டில் இலங்கைக்கு 3.8 பில்லியன் அமெரிக்க டொலர் உதவி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தருணத்தில் இந்தியாவால் வழங்கப்பட்டிருந்தாகவும் குறிப்பிட்டிருந்தார்.

தொடர்ச்சி P2

இலங்கையின் கடன் மறுசீரமைப்புக்கு

ஜப்பான் ஆதரவளிக்கும்

ஜனாதிபதியிடம் ஜப்பான் வெளிவிவகார அமைச்சர் உறுதி

இலங்கைக்கான கடன் வழங்குநர்களுடன் நடத்தப்படும் கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தையில் ஜப்பான் முன்னணி பங்கை வகிக்க தயாராக இருப்பதாகவும் சர்வதேச நாணய நிதியத்துடனான இலங்கையின் பேச்சுவார்த்தையின் முன்னேற்றத்தை தாம் வரவேற்பதாகவும் ஜப்பானின் வெளிவிவகார அமைச்சர் யோஷிமாசா ஹயாஷி, ஜனாதிபதி விக்கிரமசிங்கவிடம் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

6 மணிநேர அவகாச விவகாரம்:

ஆர்ப்பாட்டக்காரர்களை கைது செய்ய முடியாது

ஒன்று கூடுவது அடிப்படை உரிமை என்கிறார் சாலிய பீரிஸ்

அனுமதிப்பத்திரம் இன்றி ஆர்ப்பாட்டப் பேரணி நடத்துவதை குற்றமாகவோ அல்லது பேரணியில் கலந்து கொள்பவர்களைக் கைது செய்யவோ முடியாது என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

சீனியும் சிக்கியது; இருவரும் சிக்கினர்

பேலியகொடை பிரதேசத்தில் களஞ்சியசாலையில் வைக்கப்பட்டிருந்த மனித பாவனைக்கு உதவாத 3,000 கிலோ கிராம் சீனி, விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

நுரைச்சோலை மின்பிறப்பாக்கிகள்

மூன்றில் இரண்டு இயங்கவில்லை

தேசிய மின் கட்டமைப்புக்கு 600 மெகாவோட் இழப்பு

நாட்டின் தேசிய மின் கட்டமைப்புக்கு 900 மெகாவோட் மின்சாரத்தை வழங்கும் நுரைச் சோலை அனல் மின்நிலையத்தின் மூன்றாவது மின்பிறப்பாக்கி, நீராவி கசிவின் காரணமாக செயலிழந்துள்ளதாக இலங்கை மின்சார சபை, நேற்று (27) அறிவித்தது.

தொடர்ச்சி P2

இலங்கையில் மீண்டும் முதலீடு செய்வதில்

சிங்கப்பூர் ஆர்வம்

ஜனாதிபதியிடம் சிங்கபூர் பிரதமர் எடுத்துரைப்பு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சிங்கப்பூர் பிரதமர் லீ சியன் லூங்கை நேற்று டோக்கியோவில் சந்தித்தார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

‘சிங்களவர் எவரையும் குடியேற்ற மாட்டேன்’

தற்காலத்தைப் போன்று தொன்மைப் பொருட்களைப் பாதுகாப்பதற்கான வேலைத்திட்டம் எதிர்காலத்தில் அமுல்படுத்தப்படும் என நம்புவதாக தெரிவித்தார். விஹாரை தேவாலயம் சட்டத்திருத்தம் தற்போது வரையப்பட்டு வருவதுடன், மகாநாயக்க தேரர்கள் மற்றும் ஏனைய சங்கங்களுடன் கலந்துரையாடிய பின்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

வர்த்தமானியை வலிதற்றதாக்கவும்

அதற்கிணங்க, அதியுயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றி, புலனாய்வுப் பிரிவினரை ஒருங்கிணைத்து விசேட பாதுகாப்பு வேலைத்திட்டத்தை தயாரிக்குமாறு, பொதுப் பாதுகாப்பு அமைச்சுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.
ஜப்பான் மற்றும் பிலிப்பைன்ஸ் விஜயத்தின் பின்னர், ஜனாதிபதி நாடு திரும்பியதும் வர்த்தமானி இரத்துச் செய்யப்படும் என நம்பத்தகுந்த வட்டாரங்களின் மூலம் அறிய முடிகிறது.

கொழும்பில் இராணுவ அரண்கள்

புதிய சுதந்திர மக்கள் சபையில் நேற்று (27) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து கருத்துரைத்த அவர், இந்த அரசாங்கம் மனித உரிமை மீறல்களில் ஈடுபடுவது புதிய விடயமல்ல.
பாதுகாப்பு அமைச்சர் என்கிற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த வெள்ளிக்கிழமை புதிய பாதுகாப்பு வலயங்களுக்கான வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டிருந்தார்.
அரச இரகசியங்கள் சட்டத்தின் இரண்டாம் உறுப்புரையின் படி இந்த பாதுகாப்பு வலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன.
எனினும் இச்சட்டம் 67 வருடங்கள் பழமையானது எனவும் தெரிவித்தார்.

இது சட்டவிரோதமானச் செயற்பாடு. அமைச்சரவை இரகசியங்கள் போன்றவற்றைப் பாதுகாப்பதற்கே இச்சட்டம் உள்ளது. இதனூடாக பாதுகாப்பு வலயங்களை அமைக்க முடியாது.
கொழும்பில் உள்ள பாரிய பிரதேசங்களை பாதுகாப்பு வலயங்கள் என்கிற பெயரில் இராணுவ அரண்களாக அரசாங்கம் மாற்றியுள்ளது எனவும் தெரிவித்தார்.

உயர் பாதுகாப்பு வலயங்களில் போராட்டங்கள், ஒன்று கூடல்களை முன்னெடுக்க முடியாது.
மக்களுக்குள்ள அதிகாரங்களை அரசாங்கம் சட்டவிரோதமாக பறித்துள்ளது.
போராட்டங்களை மேற்கொள்ள 6 மணித்தியாங்களுக்கு பொலிஸாரிடம் அனுமதியை கோர வேண்டும் என பதில் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.
பொதுமக்களுக்கு அரசியலமைப்பின் ஊடாக வழங்கப்பட்டுள்ள இந்த உரிமைகளை அனுபவிக்க எவரிடமும் அனுமதியைப் பெற வேண்டியதில்லை எனவும் தெரிவித்தார்.

புதிதாக அறிவிக்கப்பட்டுள்ள உயர் பாதுகாப்பு வலயங்களில் வாழும் மக்கள், தங்களது வீடுகளில் உள்ளவர்களின் பெயர் பட்டியலை பொலிஸார் கோரினால் வழங்க வேண்டும். அதுபோல தங்களது வீடுகளுக்கு வரும் உறவினர்கள், நண்பர்கள் உள்ளிட்டோரின் பெயர்களை 24 மணித்தியாலங்களுக்குள் பொலிஸாருக்கு அறிவிக்க வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் பீரிஸ் தெரிவித்தார்.

இவ்வாறு பொலிஸாருக்கு தகவல்களை வழங்கவில்லை என்றால் அது தண்டனைக்குரிய குற்றம்.
இரண்டாம் உலகப் யுத்தம் இடம்பெறும்போதுக் கூட பிரித்தானிய அரசாங்கம் இதுபோன்ற படுமோசமான சட்டங்களை அமல்படுத்தியதில்லை.
தற்போது யுத்தம் இல்லை.
பின்னர் எதற்காக உயர் பாதுகாப்பு வலயங்கள்? எனவும் தெரிவித்தார்.

உயர் பாதுகாப்பு வலயங்களில் ஐஸ்பழம் விற்பனை செய்பவருக்குக் கூட பிரச்சினைகள் வரலாம். காலி முகத்திடலில் சென்று இனி பட்டாசுகளைக்கூட கொளுத்த முடியாது. இதுபோன்ற நாட்டுக்கு சுற்றுலாப் பயணிகள் வருவார்களா? என்றும் கேள்வியெழுப்பினார்.

அப்பா, தாத்தாவிடம் கேட்டுப்பாருங்கள்

சுதந்திர மக்கள் சபையில் நேற்று (27) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், போராட்டங்களை முன்னெடுப்பதில் பிரச்சினை இல்லை. ஆனால் 6 மணித்தியாலங்களுக்கு முன்பு பொலிஸாரிடம் அதற்கு அனுமதியை கேட்க வேண்டும் பதில் பாதுகாப்பு அமைச்சர் பிரமித தென்னகோன் கூறுகிறார். அவரின் அப்பா, தாத்தா பொலிஸில் இருந்திருக்கிறார். எனவே இவ்வாறு அனுமதியைப் பெற வேண்டுமா என்பதை அப்பா அல்லது தாத்தாவிடம் கேட்டு அவர் தெரிந்துக்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

மேலும், எவரும் எழுதி கொடுப்பதை வாசிக்க வேண்டும். அவ்வாறு செய்தால் இறுதியில் நீங்களே பைத்தியக்காரர் ஆகுவீர்கள் எனவும் தெரிவித்தார்.

நீதிமன்றங்களுக்கு கல்லெறியும் காலம் விரைவில் வரும் என்பதற்கான அறிகுறிகள் தென்படுகிறது. அனைத்துத் துறைகளை அரசாங்கம் வீழ்த்தி வருகிறது. மக்கள் கோபத்தை வெளிப்படுத்தி வருகிறார்கள். எங்களது மாகாணத்தில் அமைச்சர்களை தலைக்கவசத்தைக் கொண்டு தாக்குகிறார்கள் எனவும் தெரிவித்தார்.

எனவே அரசாங்கத்தினர் இறுதியில் உயர் பாதுகாப்பு வலயங்களிலேயே ஓடியொழிய வேண்டிய நிலை ஏற்படும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை யாரோ இயக்குகிறார்கள். ஜனாதிபதிக்கான இரகசிய வாக்கெடுப்பின்போது ரணிலுக்கு வாக்களித்த 134 எம்.பிகளும் ரணிலை ஆட விட்டுப் பார்க்கிறார்கள்.

இலங்கைக்கு மிகமுக்கிய உதவிகளை செய்கிறோம்

ஐக்கிய நாடுகள் பொதுச்சபை அமர்வில் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்.

பயங்கரவாதம், பெருநோய் அல்லது சூழல் சார்ந்த சிக்கல்கள் போன்ற உலகளாவிய சவால்களை எதிர்கொள்வதற்காக ஒன்றிணைவு, ஐக்கியம் மற்றும் கூட்டொருமைப்பாடு ஆகியவற்றுக்கும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.
உலகளாவிய ரீதியில் இந்தியாவால் முன்னெடுக்கப்படும் 700 திட்டப்பணிகள் பசுமையுடனான அபிவிருத்தி, சிறந்த தொடர்புகள், டிஜிட்டல் மயமான விநியோகங்கள் மற்றும் இலகுவான சுகாதார பொறிமுறைகள் ஆகியவற்றின் மீதான அக்கறையினை சுட்டிக்காட்டுகின்றன.

இந்தியாவின் அயல் நாடுகளுடனான உறவு தொடர்பாக இச்சந்தர்ப்பத்தில் கருத்துகளை முன்வைத்த வெளியுறவுத்துறை அமைச்சர், பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டிருக்கும் நாடுகளின் கடன்கள் அதிகரித்துச் செல்கின்றமை கவலைக்குரிய விடயமெனவும் குறிப்பிட்டார். தேசிய ரீதியான குறுகிய நிகழ்ச்சித் திட்டங்களுக்கு அப்பால் சர்வதேச சமூகம் மேலெழ வேண்டுமென அழைப்பு விடுத்திருந்த அவர், முன்னொருபோதும் இல்லாத வகையில் 2022 ஆம் ஆண்டில் இலங்கைக்கு 3.8 பில்லியன் அமெரிக்க டொலர் உதவி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தருணத்தில் இந்தியாவினால் வழங்கப்பட்டிருந்தாகவும் குறிப்பிட்டிருந்தார். மேலும், மனிதாபிமான உதவிகளை வழங்குதல் மற்றும் அனர்த்தங்களின் போதான பதில் நடவடிக்கைகளை மேற்கொள்தல் உள்ளிட்ட விடயங்களிலும் தனது அயல்நாடுகளுக்கு இந்தியா வலுவான ஆதரவை வழங்கியிருந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

மூன்றில் இரண்டு இயங்கவில்லை

ஏற்கெனவே ஒரு மின் பிறப்பாக்கியின் பராமரிப்புப் பணிகள் இடம்பெற்றுவரும் நிலையில், இரண்டு மின்பிறப்பாக்கிகள் மாத்திரமே தேசிய மின்கட்டமைப்புக்கு 600 மெகாவோட் மின்சாரத்தை வழங்கிக் கொண்டிருந்தன.

இந்நிலையிலேயே அந்த இரண்டு மின் பிறப்பாக்கிகளில் ஒன்று செயலிழந்துள்ளதாக மின்சார சபை அறிவித்துள்ளது.

மின் பிறப்பாக்கியின் பராமரிப்புப் பணிகள், மூன்று முதல் ஐந்து நாட்கள் வரை மேற்கொள்ளப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளதாக வலுச்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளதுடன், பணிகள் முடியும் வரை மின் உற்பத்தியை நிர்வகிக்க எரிபொருளில் இயங்கும் அனல் மின் நிலையங்கள் பயன்படுத்தப்படும் என்றும் குறிப்பிட்டார்.

எனினும், 2 மணி நேரம் 20 நிமிடங்கள் என நேற்றையதினம் அறிவிக்கப்பட்டிருந்த மின்வெட்டு நேரத்தை 3 மணித்தியாலங்களாக அதிகரிப்பதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்தது.

கொழும்பில், நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க, இன்றையதினம் 2 மணிநேரம் 20 நிமிட மின்வெட்டே அமுல்படுத்தப்படும் என்றார்.

தனியார் மின் உற்பத்தி நிலையங்களில் இருந்து மின்சாரத்தைக் கொள்வனவு செய்வதற்கு இலங்கை மின்சார சபைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கைக்கு ஐ.நாவின்...

அமைச்சர் சப்ரி வலியுறுத்துஇலங்கை எதிர்கொண்டுவரும் மோசமான பொருளாதார நெருக்கடியில் இருந்து விடுபடும் நகர்வில் சர்வதேச நாடுகளின் முழுமையான ஒத்துழைப்புகளை தாம் எதிர்பார்ப்பதாக வெளிவிவகாரத்துறை அமைச்சர் அலி சப்ரி, ஐக்கிய நாடுகள் சபை பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்ரஸ்ஸிடம் வலியுறுத்தியுள்ளார். ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையின் 77 வது அமர்வில் கலந்துகொள்ள நியூயோர்க் சென்றுள்ள வெளிவிவகாரத்துறை அமைச்சர் அலி சப்ரி, ஐக்கிய நாடுகள் சபை பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்ரஸ்ஸை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இலங்கையின் தற்போதைய நெருக்கடி நிலைமைகள், சமூக பொருளாதார சவால்கள் குறித்தும், பொருளாதார ரீதியில் மக்கள் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்தும் அமைச்சர் அலி சப்ரி எடுத்துரைத்துள்ளார். அத்துடன் தற்போதைய சவால்களை சமாளிக்க இலங்கை அரசாங்கம் எடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்து தெளிவுபடுத்தப்பட்டுள்ளதுடன், இலங்கைக்கு மேலும் ஐ.நாவின் உதவிகளை பெற்றுக்கொள்வது குறித்தும் வலியுறுத்தியுள்ளார். குறிப்பாக மாணவர்களுக்கான உணவு மற்றும் அடிப்படை தேவைகளுக்கான உதவிகளையும், பெண்களுக்கான அத்தியாவசிய தேவைகளுக்கான உதவிகளையும் அதிகளவில் எதிர்பார்ப்பதாகவும், அதற்காக சர்வதேச நாடுகளின் முழுமையான ஒத்துழைப்புக்களை தாம் எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான உதவிகளை திரட்டுவதற்கு ஐ.நாவின் ஆதரவை வழங்கியதுடன் இலங்கை முன்னோக்கி செல்லும் போது அதற்கான உரிய தரப்புகளுடன் முறையான கலந்துரையாடல் அவசியம் என்பதையும் உரையாடலின் முக்கியத்துவத்தைசெயலாளர் அன்டோனியோ குட்ரஸ் வலியுறுத்தினார். அத்துடன் இலங்கைக்கு தமது முழுமையான ஒத்துழைப்பும், ஆதரவும் வழங்கப்படும் எனவும் அவர் உறுதியளித்துள்ளார்.

ஆர்ப்பாட்டக்காரர்களை...

அரசியலமைப்பின் 14(1)(ஆ) பிரிவின் கீழ், ஒன்று கூடும் சுதந்திரம் அனைத்து குடிமக்களுக்கும் உத்தரவாதம் அளிக்கப்பட்ட அடிப்படை உரிமையாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஆர்ப்பாட்டங்களுக்கு ஆறு மணித்தியாலங்களுக்கு முன்னதாக அனுமதி பெற வேண்டும் என்ற பதில் பாதுகாப்பு அமைச்சரின் கருத்துக்கு பதிலளித்த போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் குறிப்பிட்டார்.

ஆர்ப்பாடங்களை நடத்துவதற்கு ஆறு மணித்தியாலங்களுக்கு முன்னர் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டு அவர்களின் அனுமதி பெறப்பட வேண்டும் என்று பதில் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்திருந்தார்.

1983ஆம் ஆண்டு இடம்பெற்ற விவியன் குணவர்தன எதிர் ஹெக்டர் பெரேரா வழக்கில், உயர் நீதிமன்ற நீதியரசர் ஜே.எப்.ஏ.சோசா வழங்கிய தீர்ப்பை சாலிய பீரிஸ் சுட்டிக்காட்டினார்.

அதற்கமைய 1983இல் போராட்டக்காரர்களைக் கலைந்து செல்லுமாறு உதவிப் பொலிஸ் பரிசோதகர் கணேசநாதன் பிறப்பித்த உத்தரவு எந்த சட்ட அடிப்படையும் அற்றது என நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதாக சுட்டிக்காட்டினார். எனவே, அனுமதிப்பத்திரம் இன்றி ஆர்ப்பாட்டப் பேரணிகளை நடத்துவதை குற்றமாகவோ அல்லது பேரணியில் கலந்து கொள்பவர்களைக் கைது செய்யவோ முடியாது என்றார்.

சீனியும் சிக்கியது...

கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில், நேற்று முன்தினம் (26) இரவு மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பு தேடுதலின் போதே சீனி கைப்பற்றப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட இருவரும் பேலியகொடை பிரதேசத்தை சேர்ந்த 41 மற்றும் 48 வயதானவர்கள் என்றும் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட இவ்விருவரும் மேலதிக விசாரணைகளுக்காக, பேலியகொடை பொதுமக்கள் பரிசோதனை காரியாலய அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக அந்த களஞ்சியசாலை சீல் வைக்கப்பட்டுள்ளது.

ஜப்பான் ஆதரவளிக்கும்

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ,ஜப்பானின் வெளிவிவகார அமைச்சர் யோஷிமாசா ஹயாஷியை நேற்று (27) டோக்கியோவில் சந்தித்து கலந்துரையாடியிருந்தார். இலங்கையின் கடந்த ஆட்சியில் பல முதலீட்டுத் திட்டங்களை இரத்துச் செய்ததைத் தொடர்ந்து ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டது குறித்து ஜனாதிபதி விக்ரமசிங்க இதன்போது வருத்தம் தெரிவித்தார். அந்த திட்டங்களை மீள ஆரம்பிக்க எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். இலங்கையின் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி திட்டங்களில் ஜப்பான் முதலீடு செய்ய வேண்டும் என்பதில் இலங்கை அரசாங்கம் ஆர்வம் காட்டுவதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

புதுப்பிக்கத்தக்க வலுசக்தி திட்டங்களில் முதலீடு செய்வதில் ஜப்பான் அர்ப்பணிப்புடன் உள்ளதாகவும் இதற்கமைய எதிர்கால முதலீட்டு வாய்ப்புகளை இலங்கையில் மேற்கொள்வது குறித்து ஆராய தயாராக இருப்பதாகவும் ஜப்பான் வெளிவிவகார அமைச்சர் ஹயாஷி தெரிவித்துள்ளதுடன், இலங்கை புலம்பெயர் தொழிலாளர்களுக்கான தேர்ச்சியுற்ற தொழிலாளர் பரீட்சையை 2023 ஜனவரியில் ஜப்பான் ஆரம்பிக்கும் என்றும் வெளிவிவகார அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

சிங்கப்பூர் ஆர்வம்

ஜனாதிபதி அலுவலகத்தின் கீழ் சர்வதேச வர்த்தக அலுவலகம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டிருப்பது தொடர்பில், இந்த சந்திப்பின் போது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, சிங்கப்பூர் பிரதமரிடம் விளக்கமளித்தார்.

சிங்கப்பூருடனான சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த முன்னுரிமை வழங்குவதாகவும் ஜனாதிபதி இதன்போது குறிப்பிட்டார். இதனை வரவேற்ற பிரதமர் லீ சியென் லூங் , இலங்கையில் முதலீடு செய்ய சிங்கப்பூர் மீண்டும் எதிர்பார்த்திருப்பதாகத் தெரிவித்தார்.

அடுத்த வருடம் இலங்கை 75ஆவது சுதந்திர தினத்தை கொண்டாட இருக்கும் நிலையில் இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு சிங்கப்பூர் பிரதமருக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார்.

இந்திய உயர்ஸ்தானிகருடன் மு.கா.தலைவர் சந்தித்துப் பேச்சு

முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும்,எம்.பியுமான ரவூப் ஹக்கீம், இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேயை அவரது உத்தியோகபூர்வ வாசஸ்தலமான இந்திய இல்லத்தில் (26) சந்தித்தார்.

அரசியல் சூழ்நிலை தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடியுள்ளதோடு, ஒலுவில் துறைமுகம் பாவனைக்கு உகந்தாக இல்லாத நிலையில், அதன் நுழைவாயில் பிரதேசத்தைச் சூழ மணல் மேடு குவிவதாலும், கடலரிப்பு காரணமாக அயல் கிராமங்களும் கூட பெரிதும் பாதிக்கப்பட்டு வருவதாலும், அலைத் தடுப்புச் சுவரின் தவறான நிர்மாணம் காரணமான சீர்கேடுகளினால் ஏற்பட்டுள்ள விளைவுகளையும் அவரது கவனத்திற்கு கொண்டுவந்துள்ளார்.

மீன்பிடித் துறைமுகங்களை அபிவிருத்தி செய்யும் இந்தியாவின் நிதியுதவித் திட்டத்தின் கீழ், ஒலுவில் துறைமுகத்தையும் அபிவிருத்தி செய்வது தொடர்பில் முன்வைத்த வேண்டுகோளையும் மிகவும் சாதகமாகப் பரிசீலிப்பதாகவும் உயர்ஸ்தானிகர் தெரிவித்துள்ளார்.

இவை தொடர்பில் மீன்பிடித் துறை அமைச்சர், இந்திய உயர்ஸ்தானிகராலய வர்த்தக ஆலோசகர் ரகேஷ் பாண்டே, துறைமுக அதிகார சபை உயர் அதிகாரிகள் ஆகியோருடனான பேச்சுவார்த்தையொன்றுக்கு ஏற்பாடு செய்யப்படவுள்ளது.

காதலனின் பிறந்தநாளுக்கு வகுப்பறையில் பியருடன் காதலி

உலகம் எதனை நோக்கி போய்க்கொண்டிருக்கிறது என்று புரிந்துகொள்ள முடிவதே இல்லை. அந்தளவுக்கு பாடசாலை மாணவர்கள் மத்தியில், பல்வேறான கூடாத பழக்கவழக்கங்கள் தொற்றிக்கொண்டுள்ளன.

மாணவியொருவர் தன்னுடைய காதலனின் பிறந்த நாளன்று, ஏனைய மாணவ, மாணவிகளுக்கு பாடசாலை வகுப்பறைக்குள் வைத்தே, பியர் பார்ட்டி நடத்திய சம்பவமொன்று சிலாபத்தில் இடம்பெற்றுள்ளது.

அதற்காக அந்த மாணவி, தன்னுடைய வீட்டில் இருந்து 20 ஆயிரம் ரூபாயை களவெடுத்துள்ளார் என்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

காதலர்களான மாணவனும் மாணவியும் ஒரே வகுப்பில், தரம் 10 இல் கல்வி பயிலுகின்றனர். மாணவனின் பிறந்த நாளன்று, வகுப்பறையில் சிறிய வைபவமொன்றை நடத்துவதாக அதிபர், ஆசிரியர்களுக்கு மாணவ, மாணவிகள் தெளிவுப்படுத்தியுள்ளனர். அதன்பின்னர் அதிபரும் ஆசிரியர்களும் அந்த வகுப்பறையை முதலில் சோதனைக்கு உட்படுத்தியுள்ளனர்.

அங்கு பல்வேறு வகையான பலகாரங்கள், இனிப்பு பண்டங்கள் இருந்துள்ளன. அதன்பின்னரே, அங்கு பியர் கேன்கள் கொண்டுவரப்பட்டுள்ளன.

இதைக் கேள்வியுற்ற பாடசாலை நிர்வாகம் அந்த பிறந்த நாள் வைபவத்தை இரத்துச் செய்தது. சம்பந்தப்பட்ட மாணவ, மாணவிகளின் பெற்றோரை அழைத்து, நடந்த சம்பவத்தை தெளிவுப்படுத்தி உள்ளனர். அதன் பின்னர், அந்த மாணவ, மாணவிகளுக்கு இரண்டுவார காலம் வகுப்பு தடையையும் விதித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் உண்மையென தெரிவித்துள்ள பாடசாலை அதிபர், சம்பந்தப்பட்ட மாணவ, மாணவிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார்.

நுகர்வோரிடமிருந்து

100 க்கும் மேற்பட்ட முறைப்பாடுகள்

கடந்த மாதத்தில் மட்டும் பெற்றோல் மற்றும் டீசல் தரம் குறைவாக இருப்பதாக, நுகர்வோரிடமிருந்து 100க்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் தமக்கு கிடைக்கப்பெற்றுள்ளதாக இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க தெரிவித்துள்ளார். நாடு முழுவதும் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இருந்து மாதிரிகளை சேகரிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

கொழுப்பில் நேற்று (27) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது: நாட்டில் எமது கட்டுப்பாட்டின் கீழ் 1,200 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் உள்ளன. இவற்றில் 100 இடங்களில் இருந்து 100 முறைப்பாடுகளை பெற்றிருப்பின், நாட்டின் 10 சதவீத நிரப்பு நிலையங்களில் தரம் குறைந்த எரிபொருள் உள்ளதென கருதமுடியும். சிலர், எரிபொருளில் இருந்து துர்நாற்றம் வருவதாக முறையிட்டுள்ளனர். சிலர், வீற்றருக்கு பயணிக்கும் தூரத்தின் அளவு வழமையை விடக் குறைந்துள்ளதாகவும் மேலும் சிலர், ஒதுக்கீட்டுக்கு ஏற்ப எரிபொருள் விநியோகிக்கப்படுவதில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

அதற்கமைய, இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் நுகர்வோர் ஆலோசனைக் குழு, குறித்த முறைப்பாடுகளை விசாரிக்கத்

தீர்மானித்துள்ளதுடன், எதிர்வரும் வாரங்களில் நாடு முழுவதும் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இருந்து மாதிரிகளை சேகரிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

சரிந்து விழுந்த வேப்பமரம்

திடீரென வீசிய பலத்த காற்றின் காரணமாக திருகோணமலை நகர் பகுதியில், வேப்பமரமொன்று சரிந்து விழுந்துள்ளது. (அ. அச்சுதன்)

பிரியாவிடை பெறும் பிரான்ஸ் தூதுவர்

சபாநாயகரை சந்தித்தார்

இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் எரிக் லவேர்ட் பிரியாவிடை பெற்றுச் செல்வதன் நிமித்தம் சபாநாயகரை இன்று (27) சந்தித்தார். இச்சந்திப்பில் பிரதித் தூதுவர் ஒரிலியன் மெய்லிட்டும் கலந்துகொண்டிருந்தார். பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்கவும் இத்தருணத்தில் இணைந்துகொண்டார்.

தேசிய பேரவையின் முதல் கூட்டம் நாளை

பாராளுமன்ற தீர்மானத்தின் மூலம் அண்மையில் நிறைவேற்றப்பட்ட 'தேசிய பேரவை'யின் அங்குரார்ப்பணக் கூட்டம் நாளை 29ஆம் திகதி மு.ப 10.30 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் பாராளுமன்றத்தில் நடைபெறவுள்ளது.

பிரதமர் தினேஷ் குணவர்த்தனவின் பிரேரணைக்கு அமைய ஸ்தாபிக்கப்பட்டுள்ள, ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசியல் கட்சிகளில் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய 'தேசிய பேரவை'க்கு பெயரிடப்பட்டுள்ள உறுப்பினர்களின் பட்டியல் சபாநாயகரால் 23ஆம் திகதி பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருந்தது.

ரூ.2 கோடி கொள்ளை விவகாரம் பிரதேச சபை உறுப்பினர் கைது

தம்புத்தேகம பகுதியில் 2 கோடியே 23 இலட்சம் ரூபாயை கொள்ளையிட முற்பட்ட சம்பவம் தொடர்பில் இராஜாங்கனை பிரதேச சபை உறுப்பினர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். கைது செய்யப்பட்டவர் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவைச் சேர்ந்தவர் என்று கூறப்படுகின்றது.

தம்புத்தேகம பிரதேசத்திலுள்ள தனியார் வங்கியொன்றில் நேற்று முன்தினம்(26) வைப்பிலிடுவதற்காக கொண்டு வரப்பட்ட 2 கோடியே 23 இலட்சம் ரூபாய் பணத்தை கொள்ளையிட்டு தப்பிச் சென்ற சந்தர்ப்பத்தில் இருவர் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களில் ஒருவர் குறித்த தனியார் வங்கியில் பணிபுரியும் பாதுகாப்பு உத்தியோகத்தர் என தெரியவந்துள்ளது.

தம்புத்தேகம - கலுன்தேகம பிரதேசத்தைச் சேர்ந்த 48 மற்றும் 50 வயதான இருவரே சம்பவத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் வசமிருந்த துப்பாக்கி, அலைபேசி, மோட்டார் சைக்கிள் உள்ளிட்ட சில பொருட்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

மின்னியல் சந்திப்பு நியமன முறைமை

நாளை முதல் அறிமுகம்

மின்னியல் சந்திப்பு நியமன முறைமையை எஸ்.எல்.டி மொபிடெல் உடன் இணைந்து வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு நாளை (29) முதல் அறிமுகப்படுத்தவுள்ளது. இது கொன்சியூலர் அலுவல்கள் பிரிவின் சரிபார்ப்பு மற்றும் அத்தாட்சிப்படுத்தல் பிரிவில் சிறந்த மற்றும் பயனுள்ள சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு பொதுமக்களுக்கு வசதியளிப்பதாக அமையும்.

மின்னியல் சந்திப்பு நியமன முறைமையானது, கொன்சியூலர் அலுவல்கள் பிரிவு மற்றும் யாழ்ப்பாணம், திருகோணமலை, கண்டி, குருநாகல், மாத்தறையில் உள்ள அதன் பிராந்திய கொன்சியூலர் அலுவலகங்களில் ஆவணங்களை அத்தாட்சிப்படுத்துவதற்கான இணையவழி நியமனங்களை பொதுமக்கள் பெற்றுக் கொள்வதனை எளிதாக்கும்.

மின்னியல் சந்திப்பு நியமன சேவையைப் பெற விரும்புபவர்கள் 225 (அலைபேசி பாவனையாளர்கள்) அல்லது 1225 (நிலையான அழைப்புத் தொலைபேசி பாவனையாளர்கள்) மற்றும் மொபிடெல் மின்னியல் சந்திப்பு (www.echannelling.com) க்கு அழைத்து, நியமனங்களைப் பெற்றுக் கொள்ளலாம். வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளம் (www.mfa.gov.lk) ஊடாகவும் தொடர்பு கொள்ள முடியும்.

சேவைகளைப் பெற்றுக் கொள்ள விரும்புபவர்களை கொன்சியூலர் அலுவல்கள் பிரிவு மற்றும் அதன் பிராந்திய கொன்சியூலர் அலுவலகங்களின் அனைத்து அத்தாட்சிப்படுத்தல் பிரிவுகளும் 2022 செப்டெம்பர் 29 முதல் மின்னியல் சந்திப்பு நியமன முறைமை மூலமாக மட்டுமே ஏற்றுக்கொள்ளும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடமையில் கண்ணயர்ந்த சாரதி

பழைய கட்டடத்தை பதம் பார்த்தாள் 'ருஹுணு குமாரி'

தெமட்டகொட ரயில் இயந்திர பழுதுபார்க்கும் பகுதியில், ருஹுணு குமாரி ரயில் மோதியதில் பழைய கட்டடமொன்றுக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாக தெமட்டகொட பொலிஸார் தெரிவித்தனர்.

பராமரிப்பு பணிகளுக்காக, பழுதுபார்க்கும் பிரிவுக்கு கொண்டு வரப்பட்ட ரயில், தண்டவாளத்தில் இருந்து தடம்புரண்டு பழைய கட்டடத்தின் மீது மோதியதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

ரயில் சாரதி, நித்திரையில் கண் அயர்ந்தமையே விபத்து ஏற்படக் காரணம் என்று முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாக பொலிஸ் அதிகாரியொருவர் குறிப்பிட்டார். இந்தச் சம்பவத்தில்

தெய்வாதீனமாக எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை என்றும் விபத்து தொடர்பில் ரயில்வே திணைக்களம் உள்ளக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

இலங்கைக்கு பரந்த அளவில் உதவி

ஐக்கிய இராச்சியம் இலங்கைக்கு முக்கிய ஆதரவை வழங்குவதற்காக 3 மில்லியன் பவுண்ஸ் மனிதாபிமானப் பொதியை அறிவித்துள்ளது. இலங்கைக்கு ஆதரவளிப்பதற்கான எமது பரந்த ஈடுபாட்டின் ஒரு பகுதியாகும் என இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் சாரா ஹல்டன் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான சவாலான காலத்தை எதிர்நோக்கும் இலங்கை மக்களுக்கு உதவும் வகையில் இங்கிலாந்து துணை நிற்பதுடன், தற்போதைய நெருக்கடி, மக்களுக்கான அவசர உணவு, விவசாய உதவிகளையும் வழங்கி வருகின்றது, அதுமட்டுமல்லாது மூன்று மில்லியன் பவுண்ஸ் உயிர்காக்கும் ஆதரவை வழங்குகிறோம். இலங்கைக்கு உதவ சர்வதேச பங்காளிகளுடன் தொடர்ந்து பணியாற்றுவோம் என ஐ.நா பொதுச் சபையில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி உடனான சந்திப்பில், இங்கிலாந்தின் பிரபு அஹ்மட் தெரிவித்திருந்தார். இந்நிலையில் இது குறித்த ட்விட்டர் பதிவொன்றை இட்டுள்ள இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் சாரா ஹல்டன், ஐக்கிய இராச்சியம் இலங்கைக்கு முக்கிய ஆதரவை வழங்குவதற்காக 3 மில்லியன் பவுண்ஸ் மனிதாபிமானப் பொதியை அறிவித்தது. இது உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் மற்றும் எமது நீண்டகால சமாதானத்தை கட்டியெழுப்பும் திட்டங்கள் உட்பட இலங்கைக்கு ஆதரவளிப்பதற்கான எமது பரந்த ஈடுபாட்டின் ஒரு பகுதியாகும் எனத் தெரிவித்துள்ளார்.

தேசிய பேரவை அர்த்தமற்றது

வாசு, வீமல், அதுரலிய தேரர் தெரிவிப்பு

தற்போது உருவாக்கப்பட்டுள்ள தேசிய பேரவையை, நாட்டின் நெருக்கடி நிலைமைகளில் இருந்து மக்களை மீட்பதற்கு பதிலாக அரசாங்கத்தை பலப்படுத்தவும், தமது பெரும்பான்மையை தக்கவைக்கவும், சகல கட்சிகளும் இதில் ஆதரவு வழங்குகின்றனர் என்பதை காட்டவுமே உருவாக்கியுள்ளனர். ஆகவே தேசிய பேரவை அர்த்தமற்றது என பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சுயாதீன அணியை சேர்ந்த, வாசுதேவ நாணயக்கார, விமல் வீரவன்ச, அதுரலியரத்தன தேரர் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

நாட்டின் நெருக்கடி நிலைமைகளில் இருந்து மக்களை மீட்டெடுக்கும் முறையான வேலைத்திட்டங்களை இன்னமும் இந்த அரசாங்கம் முன்னெடுக்கவில்லை. நாடு தொடர்ந்தும் பாதாளத்தை நோக்கியே நகர்கின்றது. இவ்வாறான நிலையில் தேசிய பேரவையென ஒன்றை உருவாக்கியுள்ளனர்.

நாம் வலியுறுத்திய தேசிய பேரவை என்பது சகல கட்சிகளையும் ஒன்றிணைத்த பொது வேலைத்திட்டமாகும். ஆனால், இன்று உருவாக்கப்பட்டுள்ள தேசிய பேரவை என்பது, வேறு விதமான கலவையாக உள்ளது. இதனால் நாட்டுக்கு எந்த பலனும் இல்லை. ஆகவே இதனூடாகத் தீர்வு காண முடியாது. அரசாங்கத்தை பலப்படுத்தவும், தமது பெரும்பான்மையை தக்கவைக்கவும், சகல கட்சிகளும் இதில் ஆதரவு வழங்குகின்றனர் என்பதை காட்டவும் உருவாக்கியுள்ளனர் எனத் தெரிவித்துள்ளனர்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிதியை வைத்து எந்தவித வேலைத்திட்டத்தையும் முன்னெடுக்க முடியாது. ஐ.எம்.எப் நிதியை விடவும் அதிகளவிலான நிதியை

இந்தியா வழங்கியுள்ளது. ஆகவே ஐ.எம்.எப்பை நாடுவது அர்த்தமற்ற ஒன்றாகவே கருதுகின்றோம். அதுமட்டுமல்ல ஐ.எம்.எப் வலியுறுத்தும் வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதன் மூலமாக மக்களின் வாழ்வாதாரம் மேலும் நெருக்கப்படுவதுடன், தேசிய கட்டமைப்புக்கு இது பாரிய நெருக்கடியை உருவாக்கும் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

மாணவர் வரவு இடாப்பில் 'டிபெக்ஸ்' பயன்படுத்தக் கூடாது

■ வி. ரி சகாதேவராஜா

மாணவர்களின் வரவுப் பதிவேடு என்பது, நிதியோடு சம்பந்தப்பட்ட ஓர் ஆவணம். எனவே அதில் 'ரிப்பெக்ஸ்' என்ற அழிகருவி பயன்படுத்தக்கூடாது என்று கல்வி அமைச்சின் முஸ்லிம் பாடசாலைகளுக்காக பணிப்பாளர் மேஜர் நசிமுதின் தெரிவித்தார்.

சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலய தேசிய பாடசாலையில் நிரல் அமைச்சினதும் வலயக்கல்விப் பணிமனையின் கல்வி சார் உத்தியோகத்தர்களினதும் வெளிவாரி மதிப்பீட்டை பூர்த்தி செய்த பின்னர் இடம் பெற்ற ஆசிரியர் கூட்டத்தில் பேசுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கூட்டம் கல்லூரி அதிபர் நாசிர்அலி தலைமையில் நடைபெற்றது. சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ் எம் எம் அமீர் தலைமையிலான கல்வி சார் அதிகாரிகள் கலந்து கொண்டார்கள். இக்கூட்டத்தில் பணிப்பாளர் மேலும் பேசுகையில்;

இலங்கையில் 943 முஸ்லிம் பாடசாலைகள் இருக்கின்றன. அதில் 53 பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாகும். புகழ் பூத்த பாடசாலைகளிலே சம்மாந்துறை முஸ்லிம் மத்திய கல்லூரியும் ஒன்று. இது பத்து ஏக்கர் பரப்பில் பிரதான வீதியருகே 3,356 மாணவர்களுடனும் 148 ஆசிரியர்களுடன் சிறந்த ஆளணி வளத்துடன் இயங்கி வருகின்றது.

ஆனால் இங்கு வருகின்ற ஆசிரியர்கள் இதயசுத்தியோடு இறைவனுக்கு பயந்து மாணவர்களுக்கு கற்பிக்க வேண்டியது கடமையாகும். எனவே, இறைவனுக்கு பயந்து இந்த ஆசிரிய சேவையை மேற்கொள்ள வேண்டும்; பாடசாலை மேலும் பல வழிகளிலே அபிவிருத்தியடைய வேண்டும். அடுத்த முறை வரும்பொழுது, மிகவும் திருப்தி அளிக்க கூடியதாக இந்தப் பாடசாலை கட்டி எழுப்பப்பட வேண்டும் என்றார்.

சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகத்தில்

சர்வதேச ஆய்வு மாநாடு

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகத்தில் இன்று (28), 'மாறிவரும் உலகின் தொழில்நுட்ப சவால்களை எதிர்கொள்ளலும் இனக்குழு சமூகத்தின் கலை, பண்பாட்டுப் பெறுமானங்களை அடையாளப்படுத்தலும்' எனும் மையப்பொருளில் சர்வதேச ஆய்வு மாநாடு நடைபெறவுள்ளது.

ஒவ்வோர் இனக்குழு சமூகமும், தமக்கென தனித்துவம் மிக்க கலை, பண்பாட்டு அடையாளங்களைக் கெண்டுள்ளது. உலகமயமாக்கல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப தம்மையும் மாற்றியமைத்துக் கொள்ளவேண்டிய தேவையின் நிமித்தம், இனக்குழு சமூகம் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் கலை, பண்பாட்டுச் சிதைவுகளை எதிர்கொள்கிறது. எனவே, இனக்குழு சமூகத்தின் கலை, பண்பாட்டு விழுமியங்களை அடையாளப்படுத்திப் பேணுவதையும் அதை வளர்ப்பதையும் நோக்கமாகக் கொண்டு, இந்த ஆய்வு மாநாடு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

இம்முறை நடைபெறவுள்ள ஆய்வு மாநாட்டில், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் நுண்கலைப் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் பி. அருட்செல்வி, பாண்டிச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவகத்தின் மானிடவியல் துறையின் ஓய்வுநிலைப் பேராசிரியர் கலாநிதி எஸ். பக்தவக்சல பாரதி, ஆதார சுருதி உரைகளை நிகழ்த்தவுள்ளனர். பிரதம விருந்தினராக கொழும்பு பல்கலைக்கழகத்தின் சமூகவியல் துறை சிரேஷ்ட பேராசிரியரும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் பேரவை உறுப்பினருமான பேராசிரியர் பிறேமகுமார டி சில்வாவும் கௌரவ விருந்தினராக கிழக்கு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் வ. கனகசிங்கமும் கலந்து சிறப்பிக்க உள்ளார்கள்.

உளவாளி போல் பிள்ளைகளை சந்தேகக்கண் கொண்டு பார்ப்பது ஆபத்தானது

■ நூருள் ஹுதா உமர்

போதைக்கு அடிமையானவர்களை அதிலிருந்து மீட்டெடுப்பது சாதாரண காரியமல்ல; அவரின் பூரண ஒத்துழைப்புக் கிடைக்காத பட்சத்தில், அது வெற்றுக் கைகளால் மலையைப் பிளப்பது போன்ற காரியமாகும் என, கல்முனை பிராந்திய பாலியல் ஆரோக்கியம், பாலியல் தொற்று நோய்கள் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம். என் முஹம்மது தில்ஷான் தெரிவித்தார்.

இன்றைய இளைஞர் சமூகம், போதைப்பழக்கத்துக்கு அடிமையாகி வருவது அதிகரித்திருப்பது தொடர்பாக அவர் கருத்துக் கூறும்போதே மேற்படி தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் கூறும்போது தெரிவித்ததாவது:

பிள்ளைகளுடன் ஒரு சுமுகமான உறவைப் பேணாமையால், அவர்கள் நண்பர்களுடனான நெருக்கத்தை அதிகரிக்கிறார்கள்.

தவறான நடத்தையுடைய நண்பர்களே, நமது பிள்ளைகளையும் தவறான நடத்தைகளின் பக்கம் இட்டுச் செல்கின்றனர். தினமும் நமது பிள்ளைகளுடன் ஒரு, சில நிமிடங்களையேனும் ஒதுக்கி, அன்றைய நாளில் இடம்பெற்ற சம்பவங்கள், நாளைய நாளுக்கான திட்டமிடல்கள் போன்றவற்றை பரஸ்பரம் பரிமாறிக் கொள்வதற்கான சூழலை அமைத்துக் கொள்ள வேண்டும்.

பிள்ளையின் தினசரி நடவடிக்கைகள் குறித்து அவதானமாயிருப்பது, மிக முக்கியமானதாகும். அதற்காக ஒரு உளவாளி போல, ஒவ்வொரு நிமிடமும் பிள்ளை என்ன செய்கிறான் என சந்தேகக் கண் கொண்டு பார்ப்பதல்ல; அது ஆபத்தானது; நமது பிள்ளையை நம்மை விட்டு அது தூரப்படுத்தி விடும்.

அடிக்கடி கோபப்படுவது, வீட்டிற்குத் தாமதமாய் வருவது, நேரத்துக்கு சாப்பிடாமை, அறைக்குள் சென்று பூட்டிக் கொள்வது, ஒழுங்காக முகங்கொடுத்து பேசாமலிருப்பது போன்ற நடத்தை மாற்றங்கள் உடன் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். பிள்ளைகளின் நடத்தை மாற்றங்களை அணுகுவதில் சிக்கல்கள் இருப்பின், மருத்துவரை அல்லது உளவளத்துணையாளரை அணுகுவது முக்கியமாகும் என்றார்.

காதிநீதிபதிகளை நியமிக்க கோரிக்கை

■ எம். முபாரக்

திருகோணமலை மாவட்ட எம். பி எம்.எஸ் தௌபீக்குக்கும் நீதி, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவுக்கும் இடையிலான சந்திப்பு திங்கட்கிழமை (26) அமைச்சில் நடைபெற்றது.

இதன்போது சில மாதங்களுக்கு முன்பு காதிநீதிபதிகளை நியமிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு, இற்றைவரை நேர்முகப் பரீட்சை நடத்தப்படாமல் கிடப்பில் போடப்பட்டு இருப்பதாகவும் காதி நீதிவான் இன்மையால், பொதுமக்கள் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாகவும் நேர்முகப் பரீட்சையை நடத்தி தகுதியானவர்களை உடனடியாக நியமிக்குமாறு, நீதி அமைச்சரை கேட்டுள்ளதாகவும் எம்.பி தெரிவித்தார்.

திலீபனின் போராட்டத்துக்கு

செவிசாய்த்திருந்தால் வரலாறு வேறுவிதமாக மாறியிருக்கும்

■ வா. கிருஸ்ணா

உலகத்துக்கு உண்ணாவிரதத்தைச் சொல்லிக்கொடுத்தவர் காந்தியாக இருக்கலாம். ஆனால், அந்த காந்தி தேசத்திற்கே உண்ணாவிரத்தின் மகிமையை ஒப்புயர்வற்ற தன்மையை உணர்த்தியவர் 'தியாகதீபம்' திலீபன் என, 'பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை' மக்கள் பேரெழுச்சி இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் வணபிதா கந்தையா ஜெகதாஸ் தெரிவித்தார். வணபிதா கந்தையா ஜெகதாஸ் தலைமையில், மட்டக்களப்பு, கொக்குவில் பகுதியில் நடைபெற்ற திலீபனின் 35ஆவது ஆண்டு நினைவு தின நிகழ்வில் எஸ். சிவயோகநாதன், அருட்தந்தை ஜோசப்மேரி ஆகியோரும் கலந்துகொண்டனர். இதன்போது, தியாகதீபம் திலீபனின் திருவுருவப் படத்திற்கு ஈகச்சுடர் ஏற்றப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது. தொடர்ந்து, வணபிதா கந்தையா ஜெகதாஸ் நினைவுரையின்போது, உலக வரலாற்றில் நீராகாரம் இல்லாமல் உண்ணா நோன்பிருந்து தன்னுடைய இன்னுயிரை ஈகம் செய்தவர்களில் முதன்மையானவராக தியாக தீபம் திகழுகின்றார். 'தியாக தீபம்' திலீபனின் அகிம்சைப் போராட்டத்துக்கு அன்றைய காலகட்டத்தில் இந்தியா, இலங்கை தேசங்கள் செவிசாய்த்திருந்தால், வரலாறு வேறுவிதமாக மாறியிருக்கும் என்றார்

வவுனியா மேல் நீதிமன்றத்தால்

குற்ற ஒப்புதல் வாக்குமூலம் நிராகரிப்பு

■ க. அகரன்

அரசியல் கைதிகள் மூவரின் குற்ற ஒப்புதல் வாக்குமூலம், நேற்று (27) வவுனியா மேல் நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

2009ஆம் ஆண்டு பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட கணேசன் தர்சன், சுலக்சன், திருவருள் ஆகியோரின் வழக்கு விசாரணை வவுனியா மேல் நீதிமன்றத்தில் நீதிபதிகளான மா. இளஞ்செழியன், இராமகமலன் கண்ணன் ஆகியோர் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டபோதே, 2013 ஆம் ஆண்டில் தாக்கல் செய்யப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் நிராகரிக்கப்பட்டுள்ளது.

இவ் வழக்கு தொடர்பான தொடர் விளக்கத்துக்காக ஒக்டோபர் மாதம் 14 ஆம் திகதி, வழக்கு திகதியிடப்பட்டு உள்ளது.

குறித்த மூன்று அரசியல் கைதிகளுக்காக சிரேஷ்ட சட்டத்தரணி அன்டன் புனிதநாயகம் ஆஜராகியிருந்தார்.

குறித்த அரசியல் கைதிகளை சில மதங்களுக்கு முன்னர் அமைச்சர் ரோகான் ரத்வத்த, துப்பாக்கி முனையில் அச்சுறுத்தியதாக சர்ச்சை ஏற்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

மன்னாரில் இறுதி அஞ்சலி மண்டபம்

■ எஸ்.றொசேரியன் லெம்பேட்

மன்னாரில் மரணிப் போருக்கு இறுதி அஞ்சலி செலுத்த, மன்னார் நகர சபையால் அமைக்கப்பட்ட புதிய அஞ்சலி மண்டபம், வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

மன்னார் நகர சபையின் 6.90 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில், அஞ்சலி செலுத்துவதற்காக பொது மண்டபம் மன்னார் பொது சேமக்காலை பகுதியில் அமைக்கப்பட்ட நிலையில் சனிக்கிழமை (24) மதியம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மரணித்தவர்களை வீட்டில் வைத்து இறுதி நிகழ்வுகள் செய்ய வசதியற்றவர்கள், இதைப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் குறித்த அஞ்சலி மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. இலங்கையில் முதன் முதலாக சபையின் நிதியூடாக மயானத்தில் அமைக்கப்பட்ட மண்டபமாக இது அமைகிறது. இதை நகர சபையின் அனுமதியுடன் யாரும் பயன்படுத்த முடியும்.

மன்னார் நகர சபையின் தலைவர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் தலைமையில் மன்னார் நகர சபையின் உறுப்பினர்கள் செயலாளர், சபையில் உத்தியோகத்தர்கள் ஆகியோரின் பங்குபற்றலுடன் மக்கள் பாவனைக்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

காட்டுக்குள் கசிப்பு வடித்தவர்கள் கைது

■ எம். றொசாந்த், செந்தூரன் பிரதீபன்

நெல்லியடி பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய, முள்ளிக்காட்டு பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பு நடவடிக்கையின் போது 60 லீற்றர் கசிப்புடன் சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் துன்னாலை, குடவத்தை பகுதியைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர். காட்டுப் பகுதியில் சட்ட விரோதமான முறையில் கசப்பு உற்பத்தி மேற்கொள்ளப்படுவதாக தகவல் கிடைக்கப்பெற்று இருந்தது. இதன் அடிப்படையில் சுற்றி வளைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

விபத்தில் சிக்கிய பொலிஸ்

மூன்று மாதங்களின் பின்னர் உயிரிழப்பு

■ எம். றொசாந்த்

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்த பொலிஸ் உத்தியோகஸ்தர் மூன்று மாத காலமாக சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சுன்னாகத்தை சேர்ந்த கோணேஸ்வரன் ஹரிபிரணவன் (வயது 29) என்பவரே உயிரிழந்துள்ளார்.

போக்குவரத்து சபை

சாரதி மீது தனியார் பஸ் சாரதி தாக்குதல்

■ செந்தூரன் பிரதீபன்

அச்சுவேலி பஸ் நிலையத்தில், இலங்கை போக்குவரத்து சபை பஸ் சாரதி மீது தனியார் பஸ் சாரதி தாக்குதல் நேற்று முன்தினம் (26) மாலை இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கி சென்ற அலுவலக பஸ் சேவையான 750 இலக்க வழித்தட பஸ்ஸின் சாரதி மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறித்த வழித்தடத்தில் சேவையில் ஈடுபடும் பஸ்கள் ஒன்றுடன் ஒன்று கலைபட்டு, பயணிகளை ஏற்றிச் செல்லும் சம்பவம் கடந்த காலங்களில் அதிகரித்துச் செல்கின்றது. இதனால் விபத்துகளும் ஏற்பட்டிருந்தன.

தனியார் பஸ்களுக்கும், போக்குவரத்து சபை பஸ்களுக்கும் இடையில் தொழில் போட்டி காரணமாக, இந்தத் தாக்குதல் சம்பவம் அச்சுவேலி பஸ் நிலையத்தில் இடம்பெற்றதாக அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவத்தில், தனியார் பஸ்ஸின் சாரதி தலைக்கவசத்தால், போக்குவரத்து சபை பஸ்ஸின் சாரதியை தாக்கி உள்ளதாக அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

உணவுப் பொதி வழங்கலுக்கு

பயனாளிகளை தெரிவு செய்வது எப்படி?

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

முல்லைத்தீவு மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களது உயிர்களைக் காப்பாற்றவும், அதிகரித்துவரும் உணவுப் பாதுகாப்பின்மையைத் தணிக்கவும் உலக உணவுத்திட்டத்தின் தலைமைப் பீட உயரதிகாரிகள், அதிக கவனம் செலுத்தி வருகின்றனர் .

அதன் அடிப்படையில், முல்லைத்தீவு மாவட்டத்தில் 30, 292 பயனாளிகள் உள்வாங்கப்பட்டு ஓகஸ்ட் மாதம் ஏழாம் திகதி, உணவுப் பாதுகாப்பற்ற மக்களுக்கு பண உதவி வழங்கல் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டு தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. தொடர்ந்து உணவுப் பொதி வழங்கல் திட்டத்தையும் முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் நடைமுறைப்படுத்த ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த திட்டத்துக்கான பயனாளி தெரிவு முறைமை தொடர்பான பயிற்சிப்பட்டறை, உலக உணவுத் திட்டத்தின் மாவட்ட பொறுப்பதிகாரி ஜெயபவாணி தலைமையில், மாவட்ட செயலக 'அரியாத்தை' மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது, உலக உணவுத்தி ட்டத்தின் பயனாளி தெரிவு முறைமை தொடர்பாக, கலந்துகொண்டோருக்கு விளக்கமளிக்கப்பட்டது. குறித்த நிகழ்வில் உலக உணவுத்திட்டத்தின் தலைமைப் பீட உயரதிகாரிகள், மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் ம. கி வில்வராஜா, பிரதேச செயலாளர்கள், மாவட்ட உலக உணவுத்திட்ட நிகழ்ச்சி திட்ட உத்தியோகத்தர் வ. கஜானனன், ஒருங்கிணைப்பு பங்காளி நிறுவனமான சர்வோதயம் நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எனப் பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டிருந்தனர்.

மாருகொன வாசிப்போர் ஒன்றியத்தின்

சிறுவர் சித்திரக் கண்காட்சி

■ ஜலில்

ஒக்டோபர் மாத வாசிப்பு மாதத்தை முன்னிட்டு, உக்குவளை மாருகொன வாசிப்போர் ஒன்றியமானது, சிறுவர்களுக்கான சித்திரக் கண்காட்சியை நடத்தவுள்ளது.

மேலும் உக்குவளை பிரதேசத்தில் பல்வேறு திறமைகள், ஆற்றல்களைக் வைத்துக்கொண்டு இலைமறைகாய்களாக இருந்து வரும் சிறுவர்கள், மாணவர்கள், முதியவர்கள் ஆகியோரின் திறமைகளை இனம்கண்டு, அவற்றினூடாக அவர்களுக்குக் களம் அமைத்துக் கொடுப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அத்துடன் பிரதேசத்திலுள்ள கலைஞர்கள் பற்றிய தகவல்கள் அடங்கிய 'எமது முத்துக்கள்' எனும் பெயரிலான நூலும் வெளியிடப்படவுள்ளது.

இவை தொடர்பான தகவல்களை, அல்ஹாஜ் எம்.ஏ.எம் தய்லமி, வாசிப்போர் ஒன்றியம், இல:26/ C மாருகொன, உக்குவளை என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

காலாவதியான மருந்தை விற்பனை செய்த

மருந்தக உரிமையாளருக்கு அபராதம்

■ பாலித ஆரியவன்ஸ

காலாவதியான மருந்துகளை நோயாளருக்கு விற்பனை செய்த, பதுளை நகரிலுள்ள மருந்தக உரிமையாளருக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர், தனது குற்றத்தை, பதுளை நீதவான் நீதிமன்றில் ஒப்புக்கொண்ட நிலையில், அவருக்கு இருபதாயிரம் ரூபாய் அபராதம் அறவிடப்பட்டுள்ளது.

பதுளை நீதவான் டபிள்யூ.என்.டி.டி சில்வா, நேற்று முன்தினம் (26) இந்த அபராதத் தொகையை செலுத்துமாறு உத்தரவிட்டுள்ளார்.

குறித்த மருந்தகத்திலிருந்து வாங்கி வந்த மருந்தை, பயன்படுத்துவதற்கு முதல் பரிசோதித்த போது, அது காலாவதியாகியிருந்தது என பெண் ஒருவர், பதுளை சுகாதார சேவை அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதையடுத்து முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போதே, மருந்தக உரிமையாளர் கைதுசெய்யப்பட்டார் என உணவு மற்றும் மருந்து பரிசோதகர்களான ஜே.ஏ.சமரிஜீவ மற்றும் எஸ். சுதர்சன் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

மாணிக்கக்கல் அகழ்ந்த

பிரதேசசபை உறுப்பினர் உள்ளிட்ட நால்வர் கைது

■ ரஞ்சித் ராஜபக்ஷ

பொகவந்தலாவை, மஹாஎலிய வனப்பகுதியில் சட்டவிரோதமான முறையில் மாணிக்கக்கல் அகழ்ந்த குற்றச்சாட்டில் பிரதேச சபை உறுப்பினர் உள்ளிட்ட நால்வர் கைது செய்யப்பட்டு உள்ளனர்.

நோர்வூட் பிரதேச சபையின் உறுப்பினர் உள்ளிட்ட நால்வர், நேற்று (27) அதிகாலை கைதுசெய்யப்பட்டு உள்ளனர்.

ஹோர்டன் சமவெளி தேசிய வனப் பூங்காவின் எல்லைப் பகுதியில் அமைந்துள்ள மஹாஎலிய வனப்பகுதியில் இவ்வாறான சட்டவிரோத செயற்பாடு முன்னெடுக்கப்படுவதாக கிடைத்த தகவலுக்கமைய மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே, சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை குறித்த சந்தேகநபர்களை கைதுசெய்யும் போது, குறித்த வனப்பகுதியில் மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டிருந்த மற்றுமொரு குழுவினர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளதாகவும், கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களை நுவரெலியா நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலாவதியான பொருட்களை பாடசாலைகளுக்கு விநியோகித்த

மூவருக்கு எதிராக சட்டநடவடிக்கை

■ ரஞ்சித் ராஜபக்ஷ

பொகவந்தலாவை பிரதேச பாடசாலைகளுக்கு காலாவதியான திகதியுடன் வண்டு, பூச்சிகளுடனான கௌபி, கடலை என்பவற்றை விநியோகித்த வர்த்தகர்களுக்கு எதிராக பொகவந்தலாவை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் பொது சுகாதார பரிசோதகர்கள், ஹட்டன் நீதவான் நீதிமன்றம் ஊடாக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளனர்.

தற்போது நவராத்திரி விரதம் ஆரம்பமாகியுள்ள நிலையில், பாடசாலைகளில் நடைபெறும் நவராத்திரி பூஜைகளுக்காக பொகவந்தலாவை நகரில் கௌபி, கடலை உள்ளிட்ட பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

அவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் தரமற்றதாகவும் காலாவதியாகியும் உள்ளதாகத் தெரிவித்து, பாடசாலை அதிபர்களால் பொகவந்தலாவை பொது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய, நேற்று (27) பொகவந்தலாவை நகரிலுள்ள வர்த்தக நிலையங்கள் திடீர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதன்போது அதிகமான வண்டுகள், பூச்சிகள் காணப்பட்ட பொருட்களை பாடசாலைகளுக்கு விநியோகித்த மூன்று வர்த்தகர்களுக்கு எதிராக ஹட்டன் நீதவான் நீதிமன்றின் ஊடாக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் பொது சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்தனர்.

ஆலய பரிபாலன சபைக் கூட்டம்

நுவரெலியா, ஆவேலியா ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், சீத்தாஎலியா ஸ்ரீ சீதையம்மன் ஆலய பரிபாலன சபையின் 50 ஆவது வருடாந்த பொதுச் சபை கூட்டம், ஆலய பரிபாலன சபையின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தலைமையில் நேற்று முன்தினம் (26) நடைபெற்றது. (எஸ்.கே. குமார்)

நலகன நீர்வீழ்ச்சிப் பகுதி

இளைஞர், யுவதிகளால் சுத்தமாக்கப்பட்டன

■ என்.ஆராச்சி

புளத்கொஹுபிட்டிய, ரிட்டிகஹஓயா நலகன நீர்வீழ்ச்சியை அண்மித்த பகுதிகளை சுத்தப்படுத்தும் நடவடிக்கை கேகாலை மாவட்ட இளையோர் அமைப்புகளால் அண்மையில் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த நீர்வீழ்ச்சியை அண்மித்த பகுதிகளில் காணப்பட்ட பிளாஸ்டிக் கழிவுகள் இவர்களால் அப்புறப்படுத்தப்பட்டன.

இதன்போது பெருமளவு இளைஞர், யுவதிகள் இந்த நிகழ்வில் இணைந்து கொண்டதுடன், குறித்த பகுதியில் ரம்புட்டான், பலா, ஜம்பு போன்ற பழமரக் கன்றுகளையும் நாட்டினர்.

அங்குரார்ப்பண நிகழ்வு

■ ஏ.எம்.ஜலில்

உக்குவளை, மானாம்பொடயில் வை.எம்.எம்.ஏ கிளை அங்குரார்ப்பண நிகழ்வு, மானாம்பொட ஜும்ஆ மஸ்ஜித் மத்ரஸா மண்டபத்தில் நடைபெற்றது.

மானாம்பொட என்.எம் அமீனின் ஏற்பாட்டில், வை.எம்.எம்.ஏயின் தேசிய தலைவர் சஹீட் எம்.ரிஸ்வி, பணிப்பாளர் பவுசுல் ஏ காதர், மானாம்பொட மஸ்ஜித் செயலாளர் எம். இர்சாட் ஆகியோரது பங்குபற்றுதலுடன் நடைபெற்ற இந்நிகழ்வில், தலைவராக என்.எம்.அமீன், உபதலைவர்களாக எம்.

“ உக்குவளை, மானாம்பொடயில் காத்திரமான பணிகளை முன்னெடுக்க வை.எம்.எம்.ஏ கிளை அங்குரார்ப்பண நிகழ்வு, மானாம்பொட ஜும்ஆ மஸ்ஜித் மத்ரஸா மண்டபத்தில் நடைபெற்றது

ரிபான், எம்.தாலிப்தீன், செயலாளராக எம்.அப்துர் ரஹீம், பொருளாளராக எம்.ரிஸ்மி ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

இவர்களுடன் இக்கிளையின் ஏனைய இணை உறுப்பினர்களும் சில தினங்களில் தெரிவுசெய்யப்பட உள்ளனர். இதன்மூலமாகப் பல்வேறு காத்திரமான பணிகளை முன்னெடுக்கவிருப்பதாக இதன் தலைவர் அமீன் தெரிவித்துள்ளார்.

நுவரெலியா மாவட்டத்தில்

பேக்கரி தொழில் முடங்கியது

■ ரஞ்சித் ராஜபக்ஷ



கோதுமை மாவின் விலை அதிகரிப்பு மற்றும் பேக்கரி மூலப்பொருட்களின் விலை அதிகரிப்பு காரணமாக நுவரெலியா மாவட்டத்தில் சிறியளவில் பேக்கரி தொழிலில் ஈடுபட்டவர்கள், அத்தொழிலிருந்து விலகியுள்ளதாக நுவரெலியா மாவட்ட பேக்கரி சங்கம் தெரிவித்துள்ளது.

கோதுமை மாவின் விலை உயர்வு, தட்டுப்பாடு காரணமாக பேக்கரி தொழிலில் ஈடுபட்டவர்கள் அதனைக் கைவிட்டுள்ளனர் என நுவரெலியா மாவட்ட பேக்கரி உரிமையாளர்களின் தலைவர் பாசிர் மொஹமட், ஊடகங்களுக்கு நேற்று (27) அனுப்பியுள்ள விசேட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

நுவரெலியா மாவட்டத்தில் மட்டுமன்றி, நாடளாவிய ரீதியில் பல்வேறு பகுதிகளிலும் சிறிய அளவிலான பேக்கரிகளை நடத்தி வந்தவர்களில் பெரும்பாலானோர் தமது தொழிலை மூடிவிட்டனர்.

பேக்கரி தொழிலில் ஏராளமானோர் வேலை பார்த்தனர். வேலையும் பறிபோயுள்ளது. பாண் உள்ளிட்ட பேக்கரி பொருட்களின் விலை உயர்வால், அவற்றை வாங்க மக்களிடம் பணம் இல்லை.

இந்த நிலையில், பல வருடங்கள் பேக்கரி தொழில் செய்து வரும் நானும், இன்னும் சில நாள்களில் என்னுடைய பேக்கரி தொழிலை கைவிடப் போகிறேன் எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

காட்டுக்குத் தீவைத்த

16 மாணவர்கள் கைது

■ எம். செல்வராஜா

பதுளை, எல்ல பிரதேசத்தின் 'ரொக்' என்ற இடத்தின் சுமார் ஐந்து ஏக்கர் வனப்பகுதிக்கு தீவைத்தமை தொடர்பில், 16 மாணவர்கள் எல்ல பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் (26) மாலை சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பதுளை பகுதியிலுள்ள பிரபல தமிழ்ப் பாடசாலை மாணவர்கள் 16 பேரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த மாணவர்கள் பதுளையிலிருந்து எல்ல பிரதேசத்திற்கு சுற்றுலா சென்ற போதே, வனத்துக்கு தீ வைத்துள்ளமை ஆரம்பக் கட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யபட்டவர்கள் விசாரணைகளின் பின்னர் பண்டாரவளை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவுள்ளனர்.

தீப்பந்தம் ஏந்தினர்

அதிகரித்துள்ள மின்சாரக் கட்டணம், அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து கண்டி, ஜோர்ஜ் ஈ டி சில்வா பூங்காவுக்கு முன்பாக நேற்று முன்தினம் (26) இரவு தீப்பந்தம் ஏந்தி சிலர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (மொஹொமட் ஆஸிக்)

காலாவதியான மருந்தை விற்பனை செய்த

மருந்தக உரிமையாளருக்கு அபராதம்

■ பாலித ஆரியவன்ஸ

காலாவதியான மருந்துகளை நோயாளர் ஒருவருக்கு விற்பனை செய்த, பதுளை நகரிலுள்ள மருந்தக உரிமையாளர் ஒருவரிடம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர், தனது குற்றத்தை, பதுளை நீதவான் நீதிமன்றில் ஒப்புக்கொண்ட நிலையில், அவருக்கு இருபதாயிரம் ரூபாய் அபராதம் அறவிடப்பட்டுள்ளது.

பதுளை நீதவான் டபிள்யூ.என்.டி.டி சில்வா, நேற்று முன்தினம் (26) இந்த அபராதத் தொகையை செலுத்துமாறு உத்தரவிட்டுள்ளார்.

தான் குறித்த மருந்தகத்திலிருந்து வாங்கி வந்த மருந்தை, பயன்படுத்துவதற்கு முதல் பரிசோதித்த போது, அது காலாவதியாகியிருந்தது என பெண் ஒருவர், பதுளை சுகாதார சேவை அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதனையடுத்து முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போதே, மருந்தக உரிமையாளர் கைதுசெய்யப்பட்டார் என உணவு மற்றும் மருந்து பரிசோதகர்களான ஜே.ஏ.சமரிஜீவ மற்றும் எஸ். சுதர்சன் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

நெல்லிமலை குளவி மூவரை கொட்டியது

■ மெய்யன்

கண்டி, பன்விலை நெல்லிமலைத் தோட்டத்தில் தொழிலாளர்கள் மூவர் குளவிக் கொட்டுக்கு இலக்காகினர்.

நேற்று முன்தினம் (26) பிற்பகல் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தேயிலை பறித்துக் கொண்டிருந்த பெண்களை குளவிகள் கொட்டத் தொடங்கியதாகவும், இதன்போது ஏனைய பெண்களை விட குறித்த மூவரும் அதிகம் குளவிக்கொட்டுக்கு இலக்காகியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மக்கள் அல்லல்ப்படும்போது ஏன் இந்த அசமந்தப்போக்கு?

இலங்கையில் வாழும் இரண்டு நபர்கள், தமக்குள் பேசிக்கொள்ளும் போது, தமது கஷ்டங்களைப் பற்றியே அதிகம் முணுமுணுப்பதை பல இடங்களில் பார்க்க முடிகிறது. தாம் அனுபவிக்கும் இன்னல்களைப் பகர்ந்துகொள்வதன் மூலம், சற்று ஆறுதலடைய முடியுமென எண்ணுகின்றனரோ என்னவோ?

இவ்வாறான நிலையில்தான், பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க, தரமற்ற மசகு எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டு உள்ளதாகவும் அந்த எண்ணெயை மின் உற்பத்திக்கு பதிலாக, குடிக்கவே பயன்படுத்த முடியும் என்ற கருத்தையும் வெளியிட்டிருந்தார்.

அதற்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், சட்ட ரீதியில் பதிலளிக்கும் என்று வலுச்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர பதிவொன்றை இட்டிருந்தார்.

போதியளவு எரிபொருள் மற்றும் உலை எண்ணெய் கையிருப்பில் இருப்பதாகவும் எரிபொருள் பற்றாக்குறை மற்றும் லக்ஷபான மின்நிலைய கோளாறு காரணமாகவே, மின் தடையை அதிகரிக்க அனுமதி கோரப்பட்டுள்ளதாகவும் அப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

தரமற்ற மசகு எண்ணெய் குறித்து, பொது வெளியில் அம்பலப்படுத்த வேண்டிய தேவை, ஆணைக்குழுவின் தலைவருக்கு உள்ளதா என்ற கேள்வி இங்கு எழுகிறது.

குறைந்த பணத்தைக் கொண்டு சட்டை வாங்கச் செல்பவருக்கு, அந்த விலைக்கேற்ற சட்டையையே கடைக்காரர் காட்டுவார். விலையுயர்ந்த தரமான சட்டைகளை காட்டினால் அதை வாங்குவதற்கு, அவரிடம் பணம் இருக்க வேண்டுமே என்பதை, கடைக்காரர் உணர்ந்துகொள்ளாமல் இருக்கமாட்டார்.

அதுபோல, இலங்கையின் நிதி நிலைமையைக் கொண்டே, இறக்குமதியாளர்களும் செயற்படுவர் என்பதைப் புரிந்துகொள்வது சிரமம் இல்லை. அந்தவகையில், எரிபொருட்களின் தரம் தொடர்பில் பரிசோதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கு அமையவே, எரிபொருள் மாதிரிகளை சேகரித்து பரிசோதனைக்கு உட்படுத்தவுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

அதிக பணத்தைக் கொடுத்தே அனைத்தையும் மக்கள் கொள்வனவு செய்கின்ற நிலையில், தரமற்ற எரிபொருளால் வாகனங்களுக்கு ஏற்படும் சேதங்களையும் மக்களால் தாங்கிக்கொள்ள முடியாது.

இந்நிலையில், நுரைச்சோலை அனல் மின்நிலையத்தில் இயங்கிக் கொண்டிருந்த இரண்டு மின்பிறப்பாக்கிகளில் ஒன்று, நேற்று (27) செயலிழந்துள்ளதாகவும் மூன்று தொடக்கம் ஐந்து நாள்களில் அது வழமைக்கு திரும்பும் என்றும் அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

மேலும், ஏனைய அனல் மின் நிலையங்களின் உற்பத்திகளைக் கொண்டு, மின் உற்பத்தி நிர்வகிக்கப்படும் எனவும் மின்வெட்டு நீடிக்கப்பட மாட்டாது என்றும் அமைச்சர் காஞ்சன தெரிவித்த நிலையில், மின்வெட்டு நேரத்தை மூன்று மணிநேரமான அதிகரிப்பதாக ஆணைக்குழு நேற்று (27) அறிவித்தது.

தாங்க முடியாத துயரங்களை மக்கள் அனுபவித்துக் கொண்டிருக்கும் நேரத்தில், எரிபொருள் விடயத்திலும் மின் வெட்டு விடயத்திலும் முரணான கருத்துகள் மூலம் மக்களை அல்லல்படுத்தும் அசமந்தப் போக்கை தவிர்க்க வேண்டும் என்பதே எமது வேண்டுகோள்.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk

வாழ்வியல் தரிசனம்

பிள்ளைகள் வளர்ந்து வரும்போது, அவர்கள் முன்னால் பெற்றோர் வாக்குவாதம் செய்தலாகாது. சொல்லப்போனால், இத்தகைய செயல்கள் வெட்கப்படத்தக்கது.

பிள்ளைகளுக்கு ஒன்றுமே புரியாது எனப் பெற்றோர் எண்ணுகின்றனர். வானொலி, தொலைக்காட்சி, அலைபேசி எனப் பலசாதனங்கள் புளக்கத்துக்கு வந்து பல வருடங்கள் ஆகிவிட்டன.

இந்நிலையில், பிள்ளைகள் இவற்றின் ஊடாக இந்த உலகைப் பார்த்த வண்ணமே இருக்கின்றார்கள். அத்துடன், தொலைக்காட்சியில் காட்சிகளைக் காணும் நேரமே மிகநீளமானது. குடும்பச் சண்டைகள், வில்லன்கள் - வில்லிகளின் அட்டகாசங்கள், கணவன் - மனைவி மனஸ்தாபங்களை சுவாரஸ்யத்துடன் இரசிக்கிறார்கள்.

எனவே, வீட்டில் பெற்றோருக்கு இடையில் நடக்கும் பிரச்சினைகள், பிள்ளைகளைக் கட்டாயம் பாதிக்கவே செய்யும். கல்வியை விடுத்து, வேறு விடயங்களில் இளையவர்கள் நோக்குகின்றார்கள்.

ஒழுக்கமான தலைமுறை உருவாக, பெற்றோர் உண்மைநிலை, யதார்த்தங்களை உணரவேண்டும். தவறு செய்யும் பெற்றோர், தம் பிள்ளைகள் தவறு செய்யும்போது தண்டிக்க முடியாது.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

பொருளாதார குற்றங்களும் ஜெனீவா செல்கின்றன

எம்.எஸ்.எம் ஐயூப்

இலங்கை மக்களின் வாழ்க்கையை மிக மோசமாகப் பாதித்திருக்கும் பொருளாதார நெருக்கடியானது, இந்நாட்டு பொருளாதாரத்தை கையாண்ட அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் இழைத்த பொருளாதாரக் குற்றங்களின் விளைவாகும் என்றே, ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் உயர்ஸ்தானிகர் கருதுகிறார்.

மனித உரிமைகளுக்கான ஐ.நா பதில் உயர்ஸ்தானிகர் நதா அல் நஷீப், செப்டெம்பர் 13ஆம் திகதி ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பித்த இலங்கை தொடர்பான அறிக்கை மூலம் இது தெரியவந்தது. இலங்கை அரசாங்கம், 'பொருளாதார குற்றங்கள்' என்ற அந்தச் சொற்பிரயோகத்தை ஏற்க மறுத்துள்ளது.

தற்போது, சுவிட்சர்லாந்தில் ஜெனீவா நகரில் நடைபெற்று வரும் மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது கூட்டத்தில் உரையாற்றிய இலங்கையில் வெளிநாட்டமைச்சர் அலி சப்ரி, அந்தச் சொற்பிரயோகம் தெளிவற்றது என்றும் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரின் அதிகார எல்லைக்கு அப்பாற்பட்டது என்றும் குறிப்பிட்டார்.

பொருளாதார நெருக்கடிகள் பெரும்பாலும் ஆட்சியாளர்களின் முறையற்ற செயற்பாடுகளாலும் ஊழல், மோசடி போன்றவற்றாலுமே ஏற்படுகின்றன. இந்தப் பொதுவான நிலைப்பாட்டில் இருந்து, ஆட்சியாளர்களின் அவ்வாறான நடவடிக்கைகளை, 'பொருளாதார குற்றங்கள்' என்று குறிப்பிடுவது பிழையெனக் கூற முடியாது. ஆனால், மனித உரிமைகள் பேரவையின் தலைவர்கள், இதற்கு முன்னர் எந்தவொரு நாட்டின் தலைவர்களின் செயற்பாடுகளையும் இவ்வாறு குறிப்பிட்டதில்லை.

1980ஆம் ஆண்டு வரை, 'ரொடேசியா' என்றழைக்கப்பட்ட தற்போதைய சிம்பாப்வே, கடந்த சில வருடங்களாக இலங்கையைப் பார்க்கிலும் மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கி வருகிறது. அதற்கும் காரணம் அந்நாட்டுத் தலைவர்களின் ஊழல்களேயாகும். ஆயினும், அந்த ஊழல் நடவடிக்கைகளை எவரும் 'பொருளாதார குற்றங்கள்' என்று குறிப்பிடவில்லை. ஏனெனில், அந்நாட்டு மனித உரிமைகள் மீறல்கள், உலகளவில் பெரிதாக பேசுபொருளாகவில்லை.

இம்முறை மனித உரிமைகளுக்கான ஐ.நா உயர்ஸ்தானிகரின் இலங்கை தொடர்பான அறிக்கையில், 'பொருளாதார குற்றங்கள்' (Economic crimes) என்ற சொற்பிரயோகம் ஏழு இடங்களில் வந்துள்ளது. 'மனித உரிமைகள் மீறல்களுக்கும் பொருளாதார குற்றங்களுக்கும் தண்டனை இன்மை உள்ளிட்ட, நெருக்கடியின் அடிப்படை காரணங்களுக்கு தீர்வு காண்பதற்கு, சர்வதேச சமூகம் இலங்கைக்கு உதவுவதை உயர்ஸ்தானிகர் ஊக்குவிக்கிறார்' என்று ஓர் இடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் குற்றங்களுக்கான தண்டனையின்மையை விவரிக்கும்போது, '2020ஆம் ஆண்டுக்கும் 2022ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் ஊழல், 'பொருளாதார குற்றங்கள்' தொடர்பான பல வழக்குகள், பல்வேறு தொழில்நுட்பக் காரணங்களைக் காட்டி, குற்றங்களையோ அல்லது குற்றப்பத்திரங்களையோ வாபஸ் பெறுவதன் மூலம் கைவிடப்பட்டுள்ளன' என்று மற்றோர் இடத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த இடத்தில், ஊழல்களும் பொருளாதார குற்றங்களும் வெவ்வேறான விடயங்கள் என்ற கருத்து தரப்படுகிறது. ஆனால், அந்த அறிக்கையில் மற்றோர் இடத்தில், 'ஊழல் மற்றும் அதிகார துஷ்பிரயோம் உள்ளிட்ட பொருளாதார குற்றங்களுக்கான பொறுப்புக் கூறல் தொடர்பான பொதுமக்களின் கோரிக்கைக்கு, புதிய நிர்வாகம் சாதகமான பதிலை வழங்கும் என உயர்ஸ்தானிகர் எதிர்ப்பார்க்கிறார்' என்று கூறப்படுகிறது. இந்த வசனமானது, ஊழல் என்பது பொருளாதார குற்றங்களில் ஓர் அம்சம் என்ற கருத்தை தருகிறது. எனவே, உயர்ஸ்தானிகரின் 'பொருளாதார குற்றங்கள்' என்ற சொற்பிரயோகம் தெளிவற்றது என்ற அமைச்சர் சப்ரியின் வாதத்தை நிராகரிக்க முடியாது.

எனினும், 'பொருளாதார குற்றங்கள்' என்ற சொற்பிரயோகம், உயர்ஸ்தானிகரின் அதிகார எல்லைக்கு அப்பாற்பட்டது என்ற அமைச்சர் சப்ரியின் வாதம் சரியானதாகத் தெரியவில்லை. 'மனித உரிமைகள் மீது தாக்கத்தை ஏற்படுத்தும் பொருளாதார குற்றங்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்கும் திருடப்பட்ட சொத்துகளை கண்டுபிடிக்கவும் இலங்கைக்கு உதவுமாறு' உயர்ஸ்தானிகரின் அறிக்கை, மனித உரிமைகள் பேரவைக்கு பரிந்துரை செய்கிறது.

மனித உரிமைகள் மீது, பொருளாதார குறறங்கள் தாக்கத்தை ஏற்படுத்துவதாக இருப்பின், நிச்சயமாக அந்தக் குற்றங்கள், மனித உரிமைகள் பேரவையினதும் மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகரினதும் அதிகார எல்லைக்குள் வருவதை நிராகரிக்க முடியாது.

மனித உரிமைகள் மீது தாக்கத்தை ஏற்படுத்தும் பொருளாதார குற்றங்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்கும், திருடப்பட்ட சொத்துகளை கண்டுபிடிக்கவும், இலங்கைக்கு உதவுமாறு உயர்ஸ்தானிகர் பரிந்துரைத்த போதிலும், இலங்கை அரசாங்கம் பொருளாதார குற்றங்கள் இடம்பெற்றதாகவோ பொதுச் சொத்து திருடப்பட்டதாகவோ இதுவரை ஏற்றுக் கொள்ளவில்லை; ஏற்றுக் கொள்ளும் என்று கருதவும் முடியாது.

இவ்வாறிருக்க, இலங்கை அரசாங்கம், பொருளாதார குற்றங்கள் தொர்பாக விசாரணை செய்யும் என்றோ திருடப்பட்ட பொதுச் சொத்தை கண்டுபிடிக்க நடவடிக்கை எடுக்கும் என்றோ கருத, எந்தவோர் அடிப்படையும் இல்லை. எனவே, நடைபெறாத நடவடிக்கைகளுக்கு எப்படி உதவ முடியும்?

மனித உரிமைகள் மீது தாக்கத்தை ஏற்படுத்தும் பொருளாதார குற்றங்கள், உண்மையிலேயே இலங்கையில் இடம்பெற்று இருக்கின்றனவா? இலங்கை இன்று பாரியதொரு பொருளாதார அழிவையே சந்தித்துள்ளது. 50 பில்லியன் டொலருக்கு மேல், திருப்பிச் செலுத்த வேண்டிய கடன் உள்ளது. அதற்கு வெளிநாட்டு செலாவணி கையிருப்பில் இல்லை. அதன் காரணமாகவே வெளிநாட்டு செலாவணியைத் தரும் கைத்தொழில்கள், சேவைகளை நடத்திச் செல்ல முடியாத நிலைமை உருவாகியிருக்கிறது.

நாட்டில் பெரும்பான்மையாக வாழும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் மத்தியில் வறுமை மிக மோசமான நிலையை எட்டியுள்ளது. உலக உணவுத் திட்டத்தால், மூன்று மாதங்களுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின் பிரகாரம், அந்த ஆய்வில் கலந்து கொண்ட குடும்பங்களில் 73 சதவீத குடும்பங்கள், அன்றாட உணவு உட்கொள்ளலை குறைத்துக் கொண்டுள்ளன. போஷாக்கின்மையால், தெற்காசிய பிராந்தியத்தில் இலங்கை முதலிடத்தை அடைந்துள்ளதாக ஓரிரு வாரங்களுக்கு முன்னர் 'யுனிசெப்' நிறுவனம் கூறியது.

2016ஆம் ஆண்டு புள்ளிவிவரங்களின் அடிப்படையிலேயே, 'யுனிசெப்' அந்த முடிவுக்கு வந்துள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல கூறியிருந்தார். இலங்கையில், ஏழைகளை போஷாக்கின்மை அவ்வளவு பாதிக்கவில்லை என்று கூறுவதற்காகவே அமைச்சர் அவ்வாறு கூறுகிறார்.

ஆனால், 2016ஆம் ஆண்டைப் பார்க்கிலும், மிக மோசமான பொருளாதார நிலைமையையே கடந்த இரண்டு ஆண்டுகளாக, ஏழைகள் எதிர்நோக்கி இருக்கிறார்கள்.

மருத்துவமனைகளில் பல உயிர்காப்பு மருந்துகளுக்கும் கருவிகளுக்கும் தட்டுப்பாடு நிலவுகிறது. மருந்துக் கடைகளில் அவற்றை வாங்குமாறு மருத்துவர்கள், நோயாளர்களுக்கு ஆலோசனை வழங்குகின்றனர். வெளிநாட்டு செலாவணிப் பிரச்சினையால், மருந்துக் கடைகளிலும் பெரும்பாலான மருந்துகள் இல்லை. இருக்கும் மருந்துகளின் விலையும் கடந்த வருடத்தைப் பார்க்கிலும் குறைந்தது மும்மடங்காக அதிகரித்துள்ளன.

பல மருத்துவமனைகளில் மருத்துவர்களுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது. அந்த நிலையில், கடந்த எட்டு மாதங்களில் சுமார் 500 மருத்துவர்கள் சுகாதார அமைச்சுக்கு அறிவித்தும் அறிவிக்காமலும் சேவையைக் கைவிட்டு வெளிநாடுகளுக்குச் சென்றிருக்கின்றனர்.

வெளிநாட்டு செலாவணிப் பிரச்சினையால், பல கைத்தொழில்கள் முடங்கிவிட்டன; அல்லது, மந்த நிலையில் இயங்குகின்றன. அவற்றிலிருந்து ஆயிரக்கணக்கான ஊழியர்கள் வெளியேற்றப்பட்டு உள்ளனர். அவர்கள் வருமானமின்றி அவதியுறுகின்றனர். பல நிறுவனங்களில் ஊழியர்களின் சம்பளம், கடந்த இரண்டு வருடங்களாக குறைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு மக்களின் வருமானம் வேகமாகக் குறையும் நிலையில், விலைவாசி வானளாவ உயர்கிறது. இதனால், நாட்டில் பட்டினி பரவுகிறது. மாணவர்களின் கல்வி வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இவை அனைத்தும் உரிமை இழப்பாகும்.

இவை எதுவும் இயற்கை அனர்த்தங்களாலோ, உலக சந்தையில் ஏற்பட்ட பாரிய மாற்றங்களாலோ வெளிநாட்டு ஆக்கிரமிப்பொன்றாலோ ஏற்பட்டவையல்ல. இலங்கையின் பொருளாதார நெருக்கடியானது, தவறான முகாமைத்துவத்தின் விளைவாகும் என்று சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா, கடந்த மே மாதத்தில் கூறியிருந்தார்.

இலங்கை தற்போதைய நெருக்கடியிலிருந்து மீள்வதாயின், நாட்டில் இடம்பெறும் ஊழல்களைத் தடுக்க வேண்டும் என சர்வதேச நாணய நிதியம் மேலும் கூறுகிறது.

இலங்கையில் தற்போதைய நிலைமையைப் பற்றி, அமெரிக்க செனட் சபையில் அண்மையில் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணையொன்றில், நேரடியாகவே ராஜபக்ஷ குடும்பத்தின் ஊழல்கள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

இலங்கை, 2022 ஏப்ரல் மாதம், தனது வெளிநாட்டு கடன்களை திருப்பிச் செலுத்துவதை தற்காலிகமாக நிறுத்த முடிவு செய்தது. இதையடுத்து, இலங்கையின் பிணைமுறி கொள்வனவு செய்த 'சென் கீட்' தீவைச் சேர்ந்த ஒரு வங்கி, "இலங்கை தம்மிடம் பெற்ற கடனை திருப்பித் தரவில்லை" என்று நியூயோர்க் நகர நீதிமன்றமொன்றில் வழக்குத் தாக்கல் செய்தது. அந்நிறுவனம் நீதிமன்றத்தில் சமர்ப்பித்த மனுவிலும் 'ராஜபக்ஷர்களின் ஊழல்'களைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையின் பொருளாதார நெருக்கடியானது, பல தசாப்தங்களாக ஆட்சியாளர் மேற்கொண்ட நடவடிக்கைகளினதும் ஊழல்களினதும் விளைவாகும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. அதிலும், கோட்டாபய ராஜபக்ஷவின் காலத்தில் மேற்கொண்ட நடவடிக்கைகள், பொருளாதாரத்தை மிகவும் மோசமாகப் பாதித்துள்ளன. அவை மக்களின் உரிமை மீறலாகும்.

எனவே, 'பொருளாதார குற்றங்கள்' என்ற சொற்பிரயோகத்தில் எவ்வித தவறும் இல்லை. ஆனால், அவற்றைப் பற்றி இலங்கை அரசாங்கமே விசாரணை செய்ய வேண்டும் என்று, மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் குறிப்பிடுவது விந்தையான விடயமாகும்.

போர்க் கால உரிமைகள் மீறல் சம்பவங்களைப் பற்றி, 13 ஆண்டுகளாக வலியுறுத்தியும் இலங்கை அரசாங்கம் எதையும் செய்யவில்லை என்பதையும் இங்கு நினைவுபடுத்துவது உகந்தது.

கடிதங்கள்

அம்பாறை மாவட்டத்தில்

காட்டு யானைகளை கட்டுப்படுத்த கோரிக்கை

அம்பாறை மாவட்டத்தில், அண்மைக்காலமாக காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்து காணப்படுவதால், இரவு வேளைகளில் பொதுமக்கள் போக்குவரத்து செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும், யானைகள் கூட்டம் கூட்டமாக வந்து சேதங்களை ஏற்படுத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தென்கிழக்கு பல்கலைக்கழகத்துக்கு அண்மையில் உள்ள பிரதேசங்களில் பகல் வேளைகளிலும்கூட, யானைகள் கூட்டமாக வருவதால் மாணவர்களும் ஊழியர்களும் பல்வேறு அசௌகரிகங்களுக்கு முகம்கொடுத்து வருகின்றார்கள்.

இரவு வேளையில் மின்சாரம் தடைப்படுவதால், இப்பகுதிகளில் பொது மக்கள் அச்சத்துடன் வாழ்வதுடன், வீதிகளில் செல்ல முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, எல்லைக் கிராமங்களில் வாழும் மக்கள், மாலை நேரங்களில், தங்கள் குடியிருப்புகளை விட்டு வெளியேறி, தங்கள் குழந்தைகளுடன் பாதுகாப்பான இடங்களுக்கு சென்று, காலையில் வீடு திரும்பும் அவலநிலையும் ஏற்பட்டுள்ளது. இதனால், மாணவர்கள், பெண்கள், சிறுவர்கள், நோயாளர்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கிராமங்களுக்குள் உட்புகும் யானைகள் கூட்டம், வீட்டுத் தோட்டங்களையும் சேனைப் பயிர்களையும் சேதப்படுத்தி வருவதால், விவசாயிகள் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

எனவே, மாவட்டத்தில் காட்டு யானைகளின் தொல்லைகளைக் கட்டுப்படுத்துவதற்கு அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

–எம். எஸ். எம் ஹனீபா

புதுடெல்லி

பாலியல் வன்கொடுமை செய்தவரை

பூட்டிவைத்த பெண்



புதுடெல்லியில் மெஸ்ரூலி என்ற பகுதியில் 30 வயதான பெண்ணொருவர் வசித்து வந்துள்ளார்.

தனியார் விமான நிறுவனமொன்றில் பணிப்பெண்ணாக பணியாற்றிவரும் அவர், கடந்த 2 மாதங்களாக பிரபல அரசியல் கட்சியை சேர்ந்த ஆண் ஒருவருடன் நட்புடன் பழகி வந்துள்ளார்.

இந்நிலையில் சம்பவத்தினத்தன்று குறித்த பெண்ணின் வீட்டிற்கு மதுபோதையில் வந்துள்ள அந்நபர் அப்பெண்ணைப் பாலியல் வன்கொடுமை செய்துள்ளார்.

இதனையடுத்து பாதிக்கப்பட்ட அப்பெண் அந்நபரை தனது வீட்டின் அறையில் பூட்டிவைத்து விட்டு, இது குறித்து பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியுள்ளார்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற பொலிஸார், அந் நபரைக் கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கேரளா

ஊடகவியலாளரை திட்டிய நடிகர் கைது

மலையாளத் திரையுலகில் பிரபல நடிகராக வலம்வருபர் ஸ்ரீநாத் பாசி. 34 வயதான அவர் அண்மையில், நடித்த 'கொச்சியில் சட்டம்பி' என்ற திரைப்படம் தொடர்பாகப் பிரபல சமூக வலைத்தளமொன்றுக்கு செவ்வியொன்றினை அளித்திருந்தார்.

இதன்போது அவரை செவ்விகண்ட பெண் ஊடகவியலாளரை ஸ்ரீநாத் பாசி, தகாத வார்த்தைகளால் மோசமாக திட்டியதுடன், பெண்களை இழிவாகப் பேசியதாகக் கூறப்படுகிறது.

மேலும் அங்கிருந்த புகைப்படக்கலைஞரையும் அவர் தாக்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இதுதொடர்பாகக் குறித்த ஊடகவியலாளர் பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்ததைத் தொடர்ந்து, இது குறித்து விளக்கம் அளிக்க பொலிஸ் நிலையத்திற்கு வருமாறு பொலிஸார் அழைப்பு விடுத்திருந்த போதும், அவர் வருகை தரவில்லை எனக் கூறப்படுகின்றது.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் (26) ஸ்ரீநாத் பாசியை பொலிஸார் கைது செய்துள்ளனர். எனினும் அவர் தான் குறித்த ஊடகவியலாளரை திட்டவில்லை எனவும், அவர் கேட்ட கேள்விகளுக்கு மாத்திரமே விளக்கம் அளித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தென்னாபிரிக்காவில் மீண்டும் 'பாரதியார் விருதுகள்'

தென்னா பிரிக்காவின் ஜோஹன்னஸ்பர்க் நகரில் கடந்த 2 ஆண்டுகளாக நிறுத்திவை க்கப்பட்டிருந்த 'பாரதியார் விருதுகள்' மீண்டும் வழங்கப்பட்டுள்ளன.

ஜோஹன்னஸ்பர்க் நகரில் செயற்பட்டு வரும் சிவஞான சபை சார்பில் 2007ஆம் ஆண்டுமுதல் சுதந்திரப் போராட்ட வீரரும், கவிஞருமான சுப்பிரமணிய பாரதியாரின் பெயரில் விருதுகள் வழங்கப்பட்டு வந்தன.

எனினும் கொரோனா தொற்று பரவல் காரணமாகவிருதுகள் வழங்கப்படாமல் இருந்தன. இந்நிலையில், நடப்பாண்டுக்கான `பாரதியார் விருதுகள்` அண்மையில் வழங்கப்பட்டன.

'கொரோனா தொற்றுப் பரவல் காலத்தின் நாயகர்கள்' என்ற மையக்கருத்தின் அடிப்படையில் நடப்பாண்டுக்கான விருதுகள் வழங்கப்பட்டதாகவும், இதன்போது மொத்தமாக 22 தனிநபர்கள் மற்றும் சமூகக் குழுக்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் மருத்துவர்கள், செவிலியர்கள், உள்ளிட்டவர்களுக்கும் தன்னலம் கருதாது சேவையாற்றியவர்களுக்கும் இவ் விருதுகள் வழங்கப்பட்டன.

செங்கல் பட்டு

'மிஸ் தமிழ்நாடு' பட்டத்தை வென்ற

கட்டடத் தொழிலாளியின் மகள்

கட்டடத் தொழிலாளியின் மகள் 'மிஸ் தமிழ்நாடு' பட்டத்தை வென்று சாதனை படைத்துள்ளார்.

செங்கல்பட்டு மாவட்டம், திருக்கழுக்குன்றம் பகுதியைச் சேர்ந்தவர் கட்டடத் தொழிலாளி மனோகர். இவருக்கு ரக்சயா என்ற மகள் உள்ளார்.

கல்லூரிப் படிப்பை முடித்துள்ள 20 வயதான ரக்சயா, சிறு வயது முதலே அழகிப் போட்டியில் வெற்றி பெற வேண்டும் என்ற இலட்சியத்தோடு குடும்ப வறுமையை பொருள்படுத்தாமல், பகுதி நேர வேலை செய்து தன்னைத் தயார்படுத்திக் கொண்டு வந்துள்ளார்.

அத்துடன், 2018ஆம் ஆண்டு நடந்த 'மோனோ ஆக்டிங்' நிகழ்ச்சியில் கலந்து கொண்டு வெற்றி பெற்றார். இதற்காக அவர், அரசு சார்பில் மலேசியா அழைத்து செல்லப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

இந்நிலையில், ஜெய்ப்பூரில் இம்மாதம் 18ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை நடந்த போட்டியில் கலந்து கொண்டு, 'மிஸ் தமிழ்நாடு' பட்டத்தை வென்று ரக்சயா சாதனை படைத்துள்ளார்.

இதனையடுத்து வரும் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள 'மிஸ் இந்தியா' அழகி போட்டியிலும் ரக்சயா கலந்து கொள்ளவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

9 வயதில் ஆப் டெவலப்பரான சிறுமி

வாழ்த்து தெரிவித்த டிம் குக்

துபாயில் வசித்து வரும் இந்தியாவைச் சேர்ந்த ஹனா முஹம்மது ரஃபீக் என்ற 9 வயதுச் சிறுமி ஐ.ஓ.எஸ் தளத்திற்கான கதை சொல்லும் செயலியொன்றை(App) உருவாக்கிச் சாதனை படைத்துள்ளார்.

'ஹனரஸ்' எனப் பெயரிடப்பட்டுள்ள இச்செயலி மூலம் பெற்றோர்கள் தங்களது குழந்தைகளுக்கான கதைகளைத் தங்களது சொந்தக் குரலில் பதிவு செய்ய முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அச்சிறுமி கருத்துத் தெரிவிக்கையில், "எனக்கு ஐந்து வயதில் குறியீட்டும் முறை அறிமுகமானது. இது குறித்து அப்பிள் நிறுவனத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரியான (CEO)டிம் குக்கிற்கும் மின்னஞ்சல் ஒன்றையும் அனுப்பியுள்ளேன்" என்றார்.

இந்நிலையில் டிம் குக் அச்சிறுமிக்கு வாழ்த்துகள் தெரிவித்துள்ளதுடன், 'எதிர்காலத்தில் நீங்கள் அற்புதமான விடயங்களை செய்வீர்கள்' எனவும் பாராட்டியுள்ளார்.

பெங்களூர்

பொலிஸார் தாக்கியதில் வேடிக்கை பார்த்துவர் உயிரிழப்பு

பொலிஸார் லத்தியால் தாக்கியதில் இளைஞன் உயிரிழந்த சம்பவம், பெங்களூர் புறநகரில் மாதநாயக்கனஹள்ளி கிராமத்தில் இடம்பெற்றுள்ளது.

அண்மையில் குறித்த பகுதியில் உள்ள மதுபான விடுதியொன்றில் சிலர் மதுபோதையில் தகராறில் ஈடுபட்டுள்ளனர்.

இதனை அறிந்த பொலிஸார் தகராறு செய்தவர்களை லத்தியால் விரட்டி அடித்துள்ள நிலையில், அதனை வேடிக்கைப் பார்த்து கொண்டு இருந்த பலராமையும் பொலிஸார் லத்தியால் தாக்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் படுகாயமடைந்த அவர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலையில், சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் (26) உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மயூராபதியில்...

இலங்கை இராணுவத்தின் 73ஆவது ஆண்டு நிறைவு விழா, ஒக்டோபர் 10ஆம் திகதி இடம்பெறும் இராணுவ தினத்தை முன்னிட்டு இந்து மத பாரம்பரியத்துக்கு அமைவாக, ஆசிர்வாத சிறப்பு பூஜைகள் வெள்ளவத்தை மயூரபதி ஸ்ரீ பத்திரகாளியம்மன் கோவிலில் 2022 செப்டெம்பர் 26ஆம் திகதி நடைபெற்றன.

கௌரவிப்பு

அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தில் உதவி பிரதேச செயலாளராக கடமையாற்றி விடைபெற்றுச் செல்லும் ஏ.கே. றொசின்தாஜிற்கு பிரதேச செயலாளர் ரீ.எம்.எம் அன்சார் தலைமையில் பிரதேச செயலக மண்டபத்தில் பிரியாவிடை நிகழ்வு நடத்தப்பட்டது. அதன்போது அவருக்கு நினைவு சின்னமும் வழங்கப்பட்டது.

ஆசிர்வாத பூஜை

இராணுவத்தின் 73ஆவது ஆண்டு நிறைவு (ஒக்டோபர் 10) மற்றும் இராணுவ தினத்தை முன்னிட்டு அநுராதபுரம் ஜெயஸ்ரீ மஹா போதி வளாகத்தில் இராணுவ கொடிக்கு ஆசிர்வாதம் வழங்கும் நிகழ்வு இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் விக்கும் லியனகே பங்கேற்புடன் சனிக்கிழமை (24) நடைபெற்றது.

பரிசளிப்பு

பொகவந்தலாவ வை .எம். எம். ஏ அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற, பரிசளிப்பு வைபவத்தில் அதன் தேசிய தலைவர் ஹிசான் ஹமீட், முன்னாள் தலைவர் சயீட் எம் ரிஸ்மி, நுவரெலியா வை. எம். எம். ஏ அமைப்பின் இயக்குநர் ஜி. அப்துல் ரஹீம் உள்ளிட்ட பலர் கலந்துக்கொண்டு பரிசுகளை வழங்கினர்.

(எஸ். கே குமார்)

ஆரம்பம்...

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் காரைதீவு பிரதேச செயலகமும் சுவாமி விபுலாநந்தர் ஞாபகார்த்த பணிமன்றமும் இணைந்து நடத்தும் நவராத்திரி விழா, காரைதீவு சுவாமி விபுலாநந்தர் ஞாபகார்த்த மணி மண்டபத்தில் திங்கட்கிழமை (26) கலைநிகழ்ச்சிகளுடன் கோலாகலமாக ஆரம்பமானது.

(வி.ரி சகாதேவராஜா)

முன்பள்ளி திறப்பு

புளியம்பத்தை மகாசக்தி முன்பள்ளி பாடசாலை திறப்பு விழா, கலைவாணி கனிஷ்ட வித்தியாலய அதிபர் ஆ.நல்லதம்பி தலைமையில் பாடசாலை பெயர் பலகை திரைநீக்கம் செய்யப்பட்டு நேற்று (27) உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. அத்துடன், மாணவர்களுக்கான விளையாட்டு உபகரணங்களும் வழங்கப்பட்டன.

(வி.ரி.சகாதேவராஜா, நூருள் ஹுதா உமர்)

இன்று ஆரம்பிக்கிறது இருபதுக்கு – 20 தொடர்:

இந்தியாவை வீழ்த்துமா தென்னாபிரிக்கா?

இந்திய, தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட இருபதுக்கு – 20 சர்வதேசப் போட்டித் தொடரானது, திருவனந்தபுரத்தில் இன்றிரவு 7 மணிக்கு நடைபெறவுள்ள முதலாவது போட்டியுடன் ஆரம்பிக்கின்றது.

உலகக் கிண்ணத்துக்கு முந்தைய இறுதித் தொடராக இத்தொடர் இந்தியாவுக்கு அமைகின்ற நிலையில், அணியை இறுதி செய்வதற்கான இறுதிச் சந்தர்ப்பமாக இத்தொடர் நோக்கப்படுகிறது.

குறிப்பாக பந்துவீச்சே கவனம் பெறுவதோடு, புவ்னேஷ்வர் குமார், ஹர்ஷால் பட்டேல் ஆகியோர் ஒட்டங்களை அதிகம் வழங்கியிருந்த நிலையில் ஜஸ்பிரிட் பும்ரா, அர்ஷ்டீப் சிங் ஆகியோர் தொடர்ச்சியாக சிறப்பாகச் செயற்படவேண்டியுள்ளதோடு, ஹர்ஷால் பட்டேல் மேம்பட்ட பெறுபேறுகளை வெளிப்படுத்தி நம்பிக்கையை அதிகரித்துக் கொள்ள வேண்டியுள்ளது. தவிர, யுஸ்வேந்திர சஹாலும் தொடர்ச்சியான பெறுபேறுகளை வெளிப்படுத்த வேண்டியுள்ளது.

மறுபக்கமாக பலம் வாய்ந்த அணியாகக் காணப்படும் தென்னாபிரிக்காவில் ஒவ்வொரு வீரரும் தமது இடங்களை உறுதிப்படுத்துவதற்கு சிறப்பான பெறுபேறுகளை தொடர்ச்சியாக வழங்க வேண்டியவர்களாகக் காணப்படுகின்றனர். குறிப்பாக அணித்தலைவர் தெம்பா பவுமா குறிப்பிடத்தக்க பெறுபேறுகளை தொடர்ச்சியாக பெற வேண்டியுள்ளது.

கால்பந்தாட்ட சம்மேளன சர்ச்சை:

“நானே தலைவர்”

■ பா.நிரோஸ்

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் அநுர டி சில்வா, போட்டி விதி மீறல்களில் ஈடுபட்டுள்ளதாக குற்றஞ்சுமத்திய யஸ்வர் உமர், தானே சம்மேளனத்தின் தற்போதைய தலைவர் எனவும் தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள ஜானகி ஹோட்டலில் நேற்று (27) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், இலங்கையின் கால்பந்தாட்ட அணியை சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனம் தடை செய்வதில் இருந்து காப்பாற்ற வேண்டும். இதற்காக இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்துக்குள் இருக்கும் பிரச்சினைகளை கடந்து ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். அவ்வாறு ஒன்றிணைந்து செயற்படவில்லை என்றால், இலங்கை அணிக்கு சர்வதேச தடை விதிக்கும் ஆபத்து இருக்கிறது. இவ்வாறு தடை விதிக்கப்பட்ட மோசமான பின்விளைவுகளை தெரிவித்தார்.

இதற்கு முன்னர் இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தில் குடும்ப ஆதிக்கம் காணப்பட்டது. எனினும் நான் தலைவராக தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் அவற்றுக்கு முடிவுக்கட்டினேன். அதுபோல தலைவரான குறுகியக் காலத்தில் இலங்கை கால்பந்தாட்ட அணியை சர்வதேச, தேசிய, கிராம மட்டப் போட்டிகளில் அதிகளவில் கலந்து கொள்ள செய்துள்ளேன். எனினும் இதற்கு முன்பிருந்த தலைவர் அவ்வாறு செயற்படாது அதிகளவான நிதியை செலவிட்டதாகவும் குற்றஞ்சுமத்தினார்.

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் தலைவரை தெரிவு செய்வதற்கான தேர்தல் விரைவில் நடைபெற உள்ள நிலையில், பெரும்பான்மையானோர் எனது பக்கம் இருப்பதால் வெற்றிபெற முடியாது என்பதை தெரிந்து எனக்கு எதிராக சேறுபூசல்கள் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவித்தார்.

பாகிஸ்தான் எதிர் இங்கிலாந்து:

இன்று ஐந்தாவது போட்டி

பாகிஸ்தான், இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான ஐந்தாவது இருபதுக்கு – 20 சர்வதேசப் போட்டியானது லாகூரில் இன்றிரவு 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஏழு போட்டிகள் கொண்ட இத்தொடரானது 2-2 என சமநிலையில் காணப்படுகின்ற நிலையில் இப்போட்டியில் வெற்றி பெறும் அணியானது முன்னிலை பெறுமென்ற நிலையில் முக்கியமானதாக இப்போட்டி காணப்படுகின்றது.

காயத்திலிருந்து குணமடைந்து வரும் இங்கிலாந்தின் அணித்தலைவர் ஜொஸ் பட்லர், இப்போட்டியிலும் பங்கேற்கமாட்டார் எனக் கூறப்பட்டுள்ள நிலையில், குழாமில் இன்னும் விளையாடாமலுள்ள ஜோர்டான் கொக்ஸுக்கு அறிமுகம் கிடைக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. தவிர, கிறிஸ் வோக்ஸ் விளையாடுவதற்கான சாத்தியக்கூறுகளும் குறைவாகவே காணப்படுகின்றன.

தேசங்களுக்கான லீக் தொடர்:

சமநிலையில் இங்கிலாந்து – ஜேர்மனி போட்டி

தேசங்களுக்கான லீக் தொடரில், தமது நாட்டில் நேற்று அதிகாலை நடைபெற்ற ஜேர்மனியுடனான போட்டியை 3-3 என்ற கோல் கணக்கில் இங்கிலாந்து சமப்படுத்தியிருந்தது.

இங்கிலாந்து சார்பாக, லுக் ஷோ, மேஸன் மௌன்ட், ஹரி கேன் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். ஜேர்மனி சார்பாக, கை ஹவேர்ட்ஸ் இரண்டு கோல்களையும், இல்கி குன்டோகன் ஒரு கோலையும் பெற்றனர்.

அமெரிக்கா

இதயத் துடிப்பைக் கண்காணிக்கும்

‘டி-ஷர்ட்’



அமெரிக்காவில் சென்சார் கருவிகளைக் கொண்டு, மிகக் குறைந் விலையில் இதயத்துடிப்பைக் கண்காணிக்கும் புதிய டி-ஷர்ட்டுகளை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

இது குறித்து விஞ்ஞானிகள் கருத்துத் தெரிவிக்கையில் “பொதுமக்கள் உடல் பயிற்சி, மற்றும் உறங்கும் போது இந்த டிஷர்ட்டுகளை அணிந்து கொள்வதன் மூலம் அவர்களது இதயத்துடிப்பைக் கண்காணிக்க முடியும்.

அதேபோல் முகக் கவசத்திலும் சென்சார் கருவிகளைப் பொருத்தி மூச்சு விடும் எண்ணிக்கையை அறியவும், விஷவாயு கசிவைத் தடுக்கவும், அமோனியாவின் அளவை கண்காணிக்கவும் ஆராய்ச்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. மேலும் இவ்வாராய்ச்சிக்கு ஆரம்பப் புள்ளியாக இருந்தவர் ஃபாஹத் அல்ஷாபௌனா என்ற மாணவர்” எனத் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்கா

‘கேக்’ மூலம் விண்ணப்பம்



அமெரிக்காவின் கரோலினா மாகாணத்தில் வசித்து வருபவர் கார்லி பாவ்லினாக் பிளாக்பர்ன்.

27 வயதான இவர் பிரபல நிறுவனமான நைக்கில் பணிபுரிவதற்காகப் பலமுறை முயற்சி செய்து வந்துள்ளார். எனினும் அவரது விண்ணப்பம் தொடர்சியாக நிராகரிக்கப்பட்டு வந்துள்ளது.

இதனால் விரக்தி அடைந்த அவர், ஒரு கேக்கை வாங்கி, அதில் தனது சுயவிவரக் குறிப்புகளை எழுதி அந்நிறுவனத்திற்கு அனுப்பியுள்ளார்.

இதனைப் பார்த்த அந்நிறுவனத்தினர் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

இந்நிலையில் இது குறித்து கருத்துத் தெரிவித்த அப்பெண், “அந்நிறுவனம் தற்போது யாருக்கும் வேலை வாய்ப்பு வழங்கத் தயாராக இல்லை. எனினும் நான் யார் என்று அந்நிறுவனத்திடம் நிரூபிக்க வேண்டும் என்பதற்காகவே இவ்வாறு செய்தேன். அதைவிட வேறு சிறப்பான வழி எனக்கு தோன்றவில்லை” என்றார்.

எகிப்து

2,600 ஆண்டுகள் பழைமையான ‘சீஸ்’

எகிப்தில் கல்லறையொன்றில் இருந்து சுமார் 2,600 ஆண்டுகள் பழைமையான பாலாடைக்கட்டி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பொதுவாக வீடுகளில் தயாரிக்கப்படும் பாலாடைக்கட்டியானது ஒரு சில நாள்களிலேயே பழுதடைந்து விடும் நிலையில், சுமார் 2,600 ஆண்டுகள் பழைமையான பாலாடைக்கட்டி, தொல்லியல் ஆய்வாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

குறித்த பாலாடைக் கட்டி, மண் பானைக்குள் இருந்து கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகவும்,

ஆடு மற்றும் செம்மறி ஆட்டின் பாலில் இருந்து இது தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

ஜேர்மனி

உக்ரேன் அகதிகளுக்கு

இனிமேல் இடம் இல்லை

உக்ரேனில் இருந்து அகதிகளாக வருபவர்களைத் தங்க வைக்க முடியாது என ஜேர்மனி தெரிவித்துள்ளது.

உக்ரேனுக்கும் ரஷ்யாவுக்கும் கடந்த பெப்ரவரி மாதம் முதல் தொடர்ச்சியாகப் போர் இடம்பெற்று வருகின்றது.

இதனால் உக்ரேனில் இருந்து இலட்சக்கணக்கான மக்கள் அண்டைய நாடுகளில் தஞ்சம் கோரி வருகின்றனர்.

குறிப்பாக ஏராளமான மக்கள் ஜேர்மனியை நோக்கிப் படையெடுப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அகதிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால், அவர்களைத் தங்க வைப்பதற்கு இடம் இல்லை என ஜேர்மனி அரசு தெரிவித்துள்ளது.

மேலும் இதுகுறித்து அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளது.

குறித்த அறிக்கையில் ‘உக்ரேன் - ரஷ்ய போர் தொடர்ந்து நீடித்துக் கொண்டே வருகிறது. இது எப்போது முடியும் என்பது யாருக்கும் தெரியாத ஒன்றாகவுள்ளது.

தற்போது விலைவாசி உயர்வு, மின் கட்டணம் உயர்வு ஆகிய பிரச்சினைகளில் ஜேர்மனி மக்கள் சிக்கித் தவிக்கின்றனர்.

இதனால் பலர் தங்களது வீடுகளில் அகதிகளைத் தங்க வைக்கும் நிலையில் இல்லை. எனவே அவர்கள் உடற்பயிற்சி கூடம் போன்ற இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளார்கள். ஆனால் அவர்கள் அங்கு நிரந்தரமாக தங்க வைக்க முடியாது” எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தாலி

இத்தாலியின் முதல் பெண் பிரதமரானார் மெலோனி

இத்தாலியின் முதல் பெண் பிரதமராக, ‘இத்தாலியின் சகோதரர்கள்’ கட்சியின் தலைவர் ஜியோர்ஜியா மெலோனி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

ஞாயிற்றுக்கிழமை (25) நடைபெற்ற பொதுத் தேர்தலில் அவரது கட்சி முன்னிலை பெற்றதைத் தொடர்ந்து, அவர் பிரதமராகப் பொறுப்பேற்கவிருப்பது உறுதியாகியுள்ளது.

தீவிர வலதுசாரிக் கொள்கைகளைக் கொண்ட அக்கட்சியின் தலைமையில் அமையவிருக்கும் அரசாங்கம்தான், இரண்டாம் உலகப் போருக்குப் பிந்தைய இத்தாலியின் முதல் வலதுசாரி அரசாங்கம் என்பது குறிப்பிடத்தக்கது.

பாஸ்டர்

எட்வர்ட் ஸ்னோடெனுக்கு

குடியுரிமை வழங்கியது ரஷ்யா

அமெரிக்க உளவு இரகசியங்களை அம்பலப்படுத்தி பரபரப்பை ஏற்படுத்திய பிரபல கணினிப் பொறியாளர் எட்வர்ட் ஸ்னோடென்னுக்கு ரஷ்ய அரசு நிரந்தர குடியுரிமை வழங்கியுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

அமெரிக்க புலனாய்வு அமைப்பான, சி.ஐ.ஏ வின் முன்னாள் கணினி நிபுணரான எட்வர்ட் ஸ்னோடென், 2013ஆம் ஆண்டு அமெரிக்க புலனாய்வு இரகசியங்கள் பலவற்றை அ அம்பலப்படுத்தி இருந்தார்.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை 28 செப்டெம்பர் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.